வார இதழ் ௨

ஆசிரியர்: மு. கருணாநிதி..

முரசு 2 | சென்னை | 20—5—55 | வெள்ளி | ஒலி 8

# வான்கோழி நடனம்

Erasay

● வான்கோழி நடனம் பற்றி கேள்விப் பட்டிருக்கிறோம். கார்முகில் கண்டு — களிப்பு கொண்டு — கான மயிலாடும் காட்டகத்தில்! அது கண்டு, தானுந் தன் பொல்லாச் சிறகை விரித்துக் குதிக்கும் வான்கோழி! ஆயிரம் நிலவுகள் — ஆயிரம் வெண்பொற் காசுகள்-ஆயிரமாயிரம் வர்ணஜாலங்கள் தோன்றும், அழகுமிழும் புள்ளி மயில் ஆட்டத்திலே! பொல்லாத கோழியின் குதிப்பிலே— போட்டியும் பொருமையும் தோன்றும்!

வான்கோழிகள் காட்டில் மட்டுமல்ல, நாட்டிலும் உண்டு! அவர்கள் நாட்டின் அதிபதிகளாக மட்டுமில்லை; சாதாரண



...இலங்கைப் பிரதமரை 'வான்கோழி' என்று கூறிய தற்கு ஆச்சாரியார் மன்னிப் புக் கேட்டுக் கொண்டார்...

பிரஜைகளாகவும் இருக்கிறார்கள். எந்தத் துறையிலும் வான்கோழிகளைக் காண முடியும். அரசியல் துறையிலே, இலக்கியத் துறையிலே, கலைத் துறையிலே, இப்படி அங்கிங்கெனாதபடி எங்குமேயுண்டு அந்தப் போலிப் பறவைகள்-பொல்லாத வான்கோழிகள்!

✶

● அழகு தமிழ்—அர்த்தம் சிதையாத அடுக்கு மொழித் தமிழ்-சுவை சொட்டும் அலங்காரத் தமிழ்-அனல் வீசும் ஆவேசத் தமிழ்-அறம் வளர்க்கும் இன்பத் தமிழ்--உணர்ச்சித் தமிழ்--உள்ளமுருக்கும் வெல்லத் தமிழ்—இப்படியெல்லாம் பாராட்டுகள் குவிந்தன, நமது அண்ணாவின் பட்டாளம், அரசியலிலும், இலக்கிய, கலைத் துறைகளிலும் அடியெடுத்து வைத்த பிறகு!

மயிலாட்டம் கண்டு மனம் பொறுக்குமா வான்கோழிக் கும்பல்!

"எமக்கெழுதத் தெரியாதோ அடுக்குச் சொல்! அர்த்தமுண்டோ இல்லையோ--ஆயிரம் 'ஆ'னாக்களை அடுக்கிக் காட்டும் ஆற்றலுண்டு எமக்கு!" என சிறு நாக்கு நீட்டி சீறிப் பாயும், சின்னதுகள் ஏராளம்--ஏராளம்!

வான்கோழிப் பண்புக்கு இஃதோர் எடுத்துக் காட்டு! இத்தகைய மனிதப்பறவைகளை --வான்கோழி மனிதர்களை எண்ணித்தான் போலும், "கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி, தானுமதுவாகப் பாவித்துத் தானுந்தன் பொல்லாச் சிறகை விரித்தாடினாற் போலுமே" என்ற தமிழ்க் கவிதை பிறந்திருக்கிறது!

● அந்தக் கவிதையை எடுத்துக் கையாளும் சந்தர்ப்பம் நமது பாரத ரத்தினத்திற்கு, பாண்டுங் மகாநாட்டின்போது கிடைத்தது! மாநாட்டிலே அல்ல; கல்கியெனும் ஏட்டிலே! இலங்கைப் பிரதமர் அமெரிக்காவின் குரலை எதிரொலித்தாராம்; அது கண்டு ஆத்திரமடைந்த ஆச்சாரியார், அந்தப் பிரதமரை 'வான்கோழி' என்று எழுதிவிட்டாராம். அந்த வாசகம் கண்ட கொத்தலவாலை, "வயதானவர்தானே; மூளைச் சிதைவு ஏற்பட்டிருக்கிறது" என்று பதில் கூறி தனக்குத் தானே ஆறுதல் பெற்றாராம். இந்த 'அரசியல் ஸ்டண்ட்' ஏன் நடைபெற்றதோ — நம்மால் யூகிக்க முடியவில்லை! இலங்கைப் பிரதமரை, வான்கோழி என்றார்; அவர் வருத்தப்பட்டதும் 'வாபஸ்' பெற்று வருத்தமும் தெரிவித்துக் கொண்டார். அதைப் பொறுத்த வரையிலே **ஆச்சாரியார் நமது பாராட்டுக்குரியவரேதான்!** எதிரியின் மனம் புண்படும்படி எழுதிவிட்டோம்--எதிரி வருந்துகிறார் என்றதும் 'வாபஸ்' பெறுவதே நியாயம்--மன்னிப்பு பெறுவதே மனிதப் பண்புக்கு அழகு —என்ற தன்மையை இப்போதாவது ஆச்சாரியார் உணர்ந்திருக்கிறாரே — எனக் கண்டு மகிழ்கிறோம். அரசியல் துறவு அவருக்களித்த புதிய பண்பு போலும் இதுவென எண்ணுகிறோம். இவரது தலைவர் நேரு துரைமகனாரைவிட இவர் எவ்வளவோ மேல் என்று இந்த சம்பவத்தின் மூலம் காட்டிக் கொண்டு விட்டார்.

✶

● ஒருவர்--ஒரு தனி மனிதர்—தன்மீது ஏவப்பட்ட ஏசலைக் கண்டு வருந்தினார்— உடனே ஆச்சாரியார் மன்னிப்புக் கேட்டார்.

ஒருவரல்ல; ஒரு நாட்டின் மக்கள்—ஒரு இனம்—"காட்டுமிராண்டி," "நான்சென்ஸ்," "பைத்தியக்காரர்கள்" — இன்னோரன்ன இழி மொழிகளைக் கேட்டு, இதயம் வெந்து, எதிர்ப்புக் குரலை உயர்த்தியும்கூட, அதற்காக சிறு வருத்தமும் தெரிவிக்க இயலாது என இறுமாந்து இருந்துவிட்டார், இந்தியாவின் ஜோதி—பண்டித நேரு —பாராளும் மனிதர்.

காரணம் என்ன? ஆச்சாரியார், திராவிடத்திலே பிறந்தவர் —விட்ட குறை தொட்ட குறை அவரது பண்பை உயர்த்திக் காட்டிவிட்டது. பண்டிதரோ, வடநாட்டுப் பார்ப்பன குலம். மண் வளமில்லை; அதனால் மனவளம் பெறவில்லை. இலங்கையாரிடம், இராசகோபாலர் மன்னிப்புக் கேட்டார். ஆம்; இராவணன் பூமியை நோக்கி, இராம காதை எழுதும் ஆசான் மன்னிப்புக் கடிதம் பறக்கவிட்டார். பண்பு மட்டுமே காரணம் -அதுவே மன்னிப்புக்கு முழுக் காரணம்-என்று சொல்லி விடவும் முடியாது நம்மால்!

**இலங்கை சுதந்திர பூமி -திராவிடம் அடிமைபூமி- இலங்கை சீறியதும், ஆச்சாரியார் அடிபணிந்தார். திராவிடம், கண்டனக் குரல் எழுப்பியும் நேரு பணிந்தாரில்லை- வருத்தம் தெரிவித்தாரில்லை — திராவிடம் அடிமை மண் தானே என்ற ஆணவம் அவரைப் பிடித்தாட்டியது. அதனால் மன்னிப்புக் கடிதம் வரவில்லை.**

எப்படியோ — தாமதமாகவாவது—தவநிலை பெற்ற பிறகாவது -அல்லது வேறு வழியில்லை என்ற நிலை ஏற்பட்ட பிறகாவது— வெறும் வீறாப்பு மட்டுமே வெளிப்படாமல் 'நல்ல தன்மை' வெளிப்பட்டிருக்கிறதே, ஆச்சாரியாரிடமிருந்து— அதற்காக அவரைப் பண்புள்ளவர்கள் பாராட்டத்தான் செய்

★ தொடர்ச்சி 4-ம் பக்கம்

Best copy available

# 'செத்தும் கொடுத்தவன்'

— மாறன் பி. ஏ. (ஹானர்ஸ்)

அவன் புகழின் உச்சாணிக் கிளையில் உட்கார்ந்து கொண்டிருக்கிறன்! அவனுக்கு நன்ருகத் தெரியும், அவனிருக்கும் நிலையில் அலட்சியமாக சிறிது அசைந்தாலும்கூட ஆபத்துக் குழியிலே வழுக்கி விழுந்துவிட வேண்டுமென்று! பொருமைச் சுருக்கள் பளபளப்பான பற்களைக் காட்டிக்கொண்டு அவனை விழுங்கக் காத்துக் கொண்டிருக்கின்றன! புறங்கூறும் நரிகள், புழுதி வாரி யிறைக்கும் நாய்கள் மரத்தடியிலே வட்டமிட்டுக்கொண்டிருக்கின்றன! இருந்தும் அவன் முகத்திலே கவலையின் கோடுகள் இல்லை; கண்கள் குளமாகவில்லை; இருதயத்திலே பாரமில்லை; ஏறு நடை நடக்கிறன் காட்டாறு போல மனம் போன திசையிலே வாழ்க்கை நடத்துகிறன்!

தங்கையா—ஆமாம்; இதுதான் அவன் பெயர். அந்தச் சொற்களைச் சொல்லிப் பார்ப்பதிலேயே சுவை காணுகிறது, ஒரு கூட்டம்! அவன் நடிக்கும் படமென்ருலே விளம்பரம் என்ற பெயரிலே பத்திரிகைகளுக்குக் கிடைக்கும் வருமானம் குறைவுதான்! காரணம், முன்னறிவிப்பு ஏதுமில்லாமலேயே அவன் படம் மாதக் கணக்கில் ஓடுகின்றன!

எந்த வேடமானலும் — கழுகுப் பார்வை காட்டி, கத்தி சுழற்றும் வில்லனுனலும் சரி; கணீரென்ற குரல் கொடுத்து, கனி நிகர் வார்த்தை கொட்டும் காதலியை, படம் முடியும் தருவாயில் மண மேடையிலே சந்தித்து வரும் கதாநாயகனுனலும் சரி—எதையும் அவன் பாத்திரங்களின் பக்குவமறிந்து நடித்து நல்ல பெயரைப் பறித்துக் கொள்வான்!

சிங்க நடை நடப்பான் ஒரு காட்சியில்! படம் பார்ப்போரின் சிந்தை துணுக்குறும் அளவுக்கு எரிமலைபோல சிரித்துக் காட்டுவான்! மற்ருெரு சமயமோ, அங்கமெலாம் குலுக்கி, அன்ன நடை நடந்து, கொட்டகையிலே களிப்புக் கடலைத் திணித்து விடுவான்!

தெருவோரத்து விளக்கடியில் நாலுபேர் சந்திக்கும்போது—வீட்டோரத்துத் திண்ணையிலே பட்டி மண்டபம் கூடும்போது—கிணற்ருேரத்து மேடையிலே குடம் சுமக்கும் கன்னியர் பலர் கூடும்போது—தங்கையாவின் தனித் திறமை பற்றிதான் பேசுவர்; தாரகையாகி விட்ட அவனது கலையுலக வாழ்வு பற்றிதான் விமர்சிப்பர்!

'துருவ நட்சத்திரமாகிவிட்டானே! தோல்வியே கிடையாதா, இவனுக்கு?' என்று எண்ணி துயர மேற்கொள்வர், அவன் எதிரிகள்!

"நேற்று பாலத்துக் கடையிலே என்னிடம் பீடிக்கு நெருப்பு கேட்டவன் தானே, இவன்! ...இன்று அவன் 'பிளேயர்ஸ்' சிகரெட்டை உதட்டிலிருந்து எடுக்காமல் அல்லவா உருட்டு விழி காட்டுகிறன்! நான் அன்று நெருப்பு தராமலிருந்திருந்தால் குளிரால் நடுங்கி செத்திருப்பானே!" என்று சொல்லம்பு பாய்ச்சியோர், ஏராளம்!

இத்தகைய சொல்லம்பு வில்லம்புகளையெல்லாம் தாங்கிக் கொள்ள தங்கையாவிடம் யாராலும் துளைக்க முடியாத இருப்புக் கவசமொன்று இருந்தது. எதையும் தாங்கிக் கொள்ளும் இருதயத்தையல்ல நான் குறிப்பிடுவது; இருதயத்தோடு ஒட்டிப் போயிருக்கும் அவன் உயிர்த் தோழன் தாமரை! ஆமாம்; தாமரை தான்! இந்தத் தாமரையும் தங்கசிற ஆதவனும் தங்கையாவின் ஒளிபட்டுத்தான் மலர்ந்தது—இப்போது மணம் பரப்பிக் கொண்டிருக்கிறது!

> என்றும் இணை பிரியாத என் இன்ப நிழலே! இது வரை நீ என் புகழ் பாடி வாழ்ந்தாய்-இனி மேல் நீ என் வசை பாடி வாழலாம்!

தாமரை—தங்கையாவைத் தொடர்ந்துகொண்டேயிருக்கும் நிழல்; அவன் உடலிலே ஒட்டிக் கொண்டிருக்கும் துணி! தங்கையா புகழ் மலையின் எவரெஸ்டில் உட்கார்ந்திருக்கும்போது கூட தாமரையும் அவன் பார்வை படும் தூரத்தில்தான் இருப்பான்! அரையிலே கோவணம் கட்டி, கோலி விளையாடிய பருவம் முதல்,இன்று கோலோச்சும் பருவம்வரை அவர்கள் இணை பிரிந்ததே கிடையாது!

தான் தங்கையாவின் பக்கத்திலே இருக்கவேண்டும்—அவன் பத்திரிகை நிருபர்களுக்கு 'போஸ்' கொடுக்கும்போதெல்லாம், தானும் அதிலே விழ வேண்டும் — என்று ஏங்கிக் கொண்டிருக்கும் கூட்டத்துக்கு தாமரை ஒரு 'தர்ம சங்கடமாக'க் காட்சி தந்தான். தகுதி சிறிதுமில்லா 'தெண்டச் சோறு'கள்கூட, தங்களுக்குப் போட்டியாக தாமரை வந்துவிட்டானே என்று வேதனைப் பட்டனர்!

தங்கையாவுடன் சற்றுத் தாராளமாகப் பழகுபவர்கள் 'போகுமிடமெல்லாம் அவனையும் ஏன் கட்டிக்கொண்டு அழுகிறீர்கள்?' என்றுகூட, இளக்காரம் தாண்டவமாடும் தொனியிலே கேட்டு வைத்தனர். அதற்கெல்லாம் தங்கையா சுண்ணும்பு வர்ணப் பற்களை வெளிக்காட்டியபடியே இப்படிப் பதில் சொல்வான்: "அமெரிக்காவிலே ரூஸ்வெல்ட் ஜனதிபதியாக இருந்தபோது ஹாப்கின்ஸ் என்பவர் அவருக்குக் காரியதரிசியாக இருந்தார். 'துரைகள் இருக்கவேண்டிய இடத்திலே ஒரு 'தகரக் குவளையா?' என்றுதான் அவரை பலரும் கேட்டார்கள். அதற்கு அவர் சொன்ன பதிலைத்தான் நான் உங்களுக்கும் சொல்லப் போகிறேன். 'சொத்து சுகம் விரும்பாத — என் அன்பைத் தவிர என்னிடமிருந்து வேறெதையும் எதிர்பார்க்காத — நண்பர் ஒருவர் உங்களுக்கு எப்படிக் கிடைப்பார்?' நீங்கள் ஜனதிபதியாய் வந்து அமர்ந்தால், அப்போதுதான் எத்தனை பேர் சுயநலத்திற்காக உங்களைத் தேடிவந்து உங்களிடம் சுரண்டிக்கொண்டு போவார்கள் என்பது உங்களுக்குத் தெரிய முடியும் அக்காலத்தில் உதவி ஏதுமின்றி தனித்து நின்று தவிப்பதாகத் தோன்றும். அப்போதுதான் ஹாப்கின்ஸ் போன்ற 'தகரக் குவளை'களின் அவசியம் உங்களுக்குப் புரிய முடியும்' — என்று ரூஸ்வெல்ட் சொல்வாராம் எனக்குக் கிடைத்த ஹாப்கினஸ்தான் தாமரை! என் நிலையிலிருந்தால் தான் தாமரையைப்பற்றி உங்களால் தெரிந்து கொள்ள முடியும் இப்படிப் பதில் சொல்வான், தங்கையா! கேள்வி கேட்டவர்கள் ஏன் வாயைத் திறந்தோமென்று கருதி, முதுகு காட்டி ஓடி விடுவார்கள்!

தங்கையாவின் புகழ் வளர வளர, அவன் தாமரையோடு கொண்டிருந்த நட்பும் வளர்ந்து கொண்டேயிருந்தது. ஒவ்வொருவரும் ஒரு நூற்ருண்டில் சம்பாதித்த பணத்தை தங்கையா ஒரே மாதத்தில் சம்பாதித்து விட்டான். பொருள் சேரச் சேர புறங்கூறும் பட்டாளமும் பெருகிக் கொண்டுதான் இருந்தது.

தங்கையா ஒழிந்தால்தான் நாம் வாழமுடியுமென்று 'அறை குடங்க'ளெல்லாம் மாநாடுகூடி தீர்மானம் தயாரித்தார்கள்.

சவால்விட்டு தங்கையாவைத் தோற்கடிக்க முடியாத சோதாக்களெல்லாம், அவன் சாகமாட்டானு — அந்த இடத்தை நாம் பிடித்துக் கொள்வதற்கு?— என்று ஏங்கிக் கொண்டிருந்தார்கள்.

யானை படுத்தால்தானே அதற்குப் பக்கத்தில் பூனை நிற்பது மற்றவர்களுக்குத் தெரிய முடியும்? அதைப் படுக்க வைக்கும் அங்குசம் தயார் செய்யமுடியாத அறிவிலிகள் எல்லோரும், பாஷாணம் தயாரிக்கத் திட்டம் தயாரித்தனர்.

காலம் ஓடியது பூனைகள் எதிர்பார்த்துக் கொண்டிருந்த அந்தப் பொல்லாத நேரமும் வந்தது. தங்கையாவைப் படுக்க வைக்க பாஷாணம் தேவைப்படவில்லை. அணு அணுவாக அவன் பொன்னுடலை பொசுக்கி எறியும் எலும்புருக்கி நோய் அவனைப் பிடித்துவிட்டது.

"டி. பி. மிகவும் கடுமையாகத் தாக்கியிருக்கிறது; இதைச் சரி செய்ய எங்களால் முடியாது" —என்று கைவிரித்தார்கள் டாக்டர்கள்!

"அமெரிக்கா சென்ருல்தான் ஒரு வேளை குணமாகும்!" — என்று அபிப்பிராயம் தெரிவித்தார், ஒரு 'ஸ்பெஷலிஸ்ட்'!

அமெரிக்கா சென்றுவர எவ்வளவு செலவானுல் என்ன? தங்கையாவிடம் செல்வத்துக்கா குறைச்சல்? அவன் வெளிநாட்டுப் பயணத்துக்குத் தயாராகி விட்டான். துணையோடு அல்ல; தனியாக!

தாய்நாடு பிரியும் தினத்தன்று தங்கையா துக்கம் தாங்காமல் அழுதான்! உற்ற நண்பர்கள் என்று ஒரு காலத்தில் உறவு கொண்டாடிய அத்தனை பேரும் அவனைக் கண்டு சிரித்தார்கள்! எப்போதும்போல இந்த நேரமும் தாமரைதான் அவன் கண்ணீரைத் துடைத்துவிட்டான். ஆனுல் இந்தத் தடவை ஒரு மாற்றம்—தடிப்பான நெஞ்சுக்காரன் என்று பெயர் பெற்ற தாமரையும் கூடவே நீர் வீழ்ச்சிகளை கண்களிலிருந்து உற்பத்தி செய்து விட்டான்!

"அழாதே, தாமரை! அனுதையாகப் பிறந்தேன்; நாடோடியாக அலைந்தேன்; முயற்சியால் முன்னணிக்கு வந்தேன்! எப்படித் திடீரென்று தோன்றினேனே, அப்படியே திடீரென்று மறையப் போகிறேன். அதற்கேன் அழுகிருய்?"

"தங்கையா, என் தங்கமே! உன்னுலேயே இந்தத் தாமரை மலர்ந்தது. நீ போன பிறகு நான் எப்படி வாழ்வேன், என் செல்வமே!" —கோவெனக் கதறிவிட்டான், அவன்!

★ தொடர்ச்சி 10-ம் பக்கம்

# தலையங்கம்

காதலிலே கவிதையிலே களம் போதும் பேச்சு;
கணவனுக்கும் மனைவிக்கும் திராவிடமே மூச்சு!

சென்னை 20—5—55 வெள்ளி

## பீக்கிங் பாதை!

நேரு சீனாவுக்குச் சென்றிருந்தபோது, யாரோ ஒருவர் சூ-என்-லாயைப் பார்த்து, 'திபேத்தில் கம்யூனிசத்தைப் புகுத்தப் போகிறீர்களா?'—என்று கேட்டாராம். அதற்கு அவர் உரக்கச் சிரித்தபடியே; 'அப்படியானால் உங்களுக்கு திபேத்தின் நிலை தெரியாமலிருக்க வேண்டும். இல்லையேல் கம்யூனிசம் என்றால் என்னவென்று தெரியாமலிருக்க வேண்டும்!'—என்று பதிலிறுத்தாராம்.

மேலும் அவர்; 'அங்கு சோஷலிசத்தையோ, கம்யூனிசத்தையோ பரப்ப வேண்டுமானால் அதற்கு இன்னும் **ஐம்பது** அல்லது **நூறு** ஆண்டுகள் பிடிக்கும்'—என்றும் பதில் சொன்னாராம்.

—இவ்வாறு நேரு குறிப்பிட்டதாக 'எக்கனமிக் ரிவ்யூ' என்னும் காங்கிரஸ் கமிட்டியின் ஏடு எழுதியிருக்கிறது.

சீனத்தைச் சிவப்பாக்கியவர்கள், திபேத்துக்குச் சாயம் பூச தயங்குவதேன்? சியாங்கை விட சிங்க நெஞ்சம் படைத்ததா திபேத் அரசாங்கம்? திபேத்திற்குப் பின்னணியில் இமயம் இருப்பதாகத்தான் இதுவரை கேள்விப் பட்டிருக்கிறோமே தவிர, அந்த உயரத்திற்கு அமெரிக்க டாலர் குவிந்திருப்பதாக நமக்குத் தெரியவில்லையே! இருந்தும் ஏன் திபேத்தைப் பார்த்ததும் மா சே துங் மார்க்ஸ் ஏட்டை மூடி வைக்கிறார்? சூ-என்-லாய் சோஷலிசம் இப்போது வேண்டாம் என்று சிரம் குனிகிறார்?

—இந்தக் கேள்விகளுக்கெல்லாம் அவர் விளக்கமாக விடையளிக்கவில்லை. ஆனால் பகுத்தறிவுக் கண்ணோட்டம் புதிர் போக்கும் மருந்தாக இருந்து, தக்கதோர் பதில் தருகிறது.

திபேத் உலகத்தின் கூரைதான்! ஆனால் அங்கே தேரை விழுங்கும் பாம்புகள் உழல்கின்றன. மதவாதப் படமெடுத்து, மௌடீக விஷம் தூவும் நச்சரவுகளைத்தான் அப்படிக் குறிப்பிடுகிறோம்!

பழைய இயற்கை வழிபாடும், பௌத்தக் கோட்பாடும் கலந்த லாமா மதம் பகுத்தறிவுக்குப் பள்ளம் தோண்டுவதில் எந்த விதத்திலும் இந்து மதத்திற்குக் குறைந்ததல்ல! இன்னும் சொல்லப் போனால் அங்கு பண்டார சன்னதிகளே மத பரிபாலனத்தோடு அரசியல் பரிபாலனத்தையும் சேர்த்து கவனித்து வருகிறார்! மூட வழக்கத்திற்குச் சிகரம் வைப்பதுபோல, ஒரு தலாய் லாமா மரித்ததும், அதே நேரத்தில் ஜனித்த ஒரு குழந்தையின் உருவில் அவர் புனர்ஜன்மம் கொள்வதாகக் கருதி, அக்குழந்தையைத் தேடிக் கண்டுபிடித்து, அதற்கு மடத்திலே பயிற்சி அளித்து, அடுத்த தலாய்லாமாவாக நியமனம் செய்கிறார்கள்!

முப்பது லட்சம் மக்கள்தான் வாழ்கிறார்கள்!—ஆனால் அவர்கள் இதயங்களிலெல்லாம் மடமை இருள் சூழ்ந்திருக்கிறது! சிந்தனா சக்தி சவமாகத் தூங்குகிறது! ரஷ்யாவிலே காணமுடியாத நிலைமை—சீனாவிலே இருந்ததைவிட சீர்கெட்ட நிலைமை—இப்போது திபேத்திலே தீயைப்போல கொழுந்துவிட்டு எரிகிறது! எனவேதான் இந்த நேரத்திலே பொதுவுடமை அங்கே புகுந்தால், பூக்காமல் காய்க்காமல், வேரோடு சாயவேண்டிய பரிதாபகரமான நிலைமை உருவாகிவிடும்—என்று சஞ்சலப்படுகிறார், சீனத்தின் முதல்வர்!

திபேத்தில், இன்றைய நிலைமையிலே மத கிரந்தங்களுக்கு முன்னே மார்க்ஸ் ஏங்கல்சின் மாசற்ற ஏடுகள் குப்பை மேடாகத்தான் கருதப்படும்! இன்னும் ஐம்பது அல்லது நூறு ஆண்டுகளிலே இந்த அவல நிலைபோக்கி, அறிவுக்கு விஷம் தூவும் அரவங்களை அஸ்தமனமாக்கி, அதன் பிறகே பொதுவுடமைக் கதிரவனை உதயமாக்க முடியுமென உத்தேசித்திருக்கிறார், சூ-என்-லாய்!

களைபோக்காமல் கதிர் காணமுடியாது என்கிறார், சூ-என்-லாய்!

மதக்கூனல் நிமிராமல் நிமிர்ந்த நடை போட முடியாது என்பதைப் புரிந்து கொண்டு பேசுகிறது பீக்கிங்!

சீனத்துச் சிந்தனையாளர்கள் கண்ட முடிவைத்தான் இத்தனை ஆண்டு காலமாக திராவிடர் இயக்கமும் கடைபிடித்து வருகிறது. படை கொண்டுவரும் ஆரியம்—அதன் ஆதரவிலே கடைவிரித்திருக்கும் இந்துமதம்—இவையிரண்டிற்கும் பாடை கட்டாமல் நாம் நல்வாழ்விற்குப் பாதை காணமுடியாது என்பது நாம் பிறந்த அன்றே தெரிந்து கொண்டே உண்மை! தியாகரும், நாயகரும் தீட்டிக் காட்டியிருக்கும் அழியாத சித்திரமும் அதுவேதான்!

இந்துமதம் பலிபீடமானால், ஆரியம் அங்கே நம் சிரம் கொய்யக் காத்து நிற்கும் கோவோள்!

அந்தப் பலிபீடம் பகுத்தறிவின் துணைகொண்டு தூள்தூளாக்கப்பட வேண்டும்—வாள் பிடித்திருக்கும் கரம் அறுத்தெறியப்பட வேண்டும்! இந்த நல்லகாரியம் உருவாகிற வரையில் அரசியல் பொருளாதார சீர்திருத்தங்கள் அவ்வளவாகப் பயன் தராது என்கிற வாசகத்தைத் தான் பாலபாடமாக அமைத்துக் கொண்டிருக்கிறோம். சமுதாயத் துறையிலே சீறிவரும் கணைகளுக்கும், சிரித்து நம் கழுத்தறுக்கும் சிந்தனையற்றோருக்கும் தக்க பதில் சொல்லி, தன்மானப் போராட்டத்தை தலைமையேற்று நடத்தி வருகிறோம்.

சீனர்களின் போர்முறை—சூ-என்-லாய் சுட்டிக் காட்டும் நேர்வழி—நம்முடைய அடிப்படை அகராதியை ஒத்திருப்பது கண்டு நாம் பூரிப்படைகிறோம்!

சமுதாயப் போர்முனை என்றதும், 'அது திராவிட இயக்கத்தவரின் வேலை!'—என்று ஒதுங்கியிருக்கும் இந்திய உபகண்டத்து கம்யூனிஸ்டுகள் சூ-என்-லாய் சொல்லுவதைக் கொஞ்சம் காது கொடுத்து கேட்க வேண்டும்.

சூ-என்-லாய் நம்மைவிட அவர்களுக்கு மிகவும் நெருங்கியவர். ஆனாலும் திபேத்திலே அவர்கள் கடைப் பிடிக்கும் கொள்கை இந்த விஷயத்தில் அவர்களை அன்னியர்களாகத்தான் ஆக்கிவிடுகிறது!

சன்யாட்சென் தோன்றி, பாதங்களைத் தொட்டு நின்ற சடாமுடியைக் கத்தரித்து, சமுதாயத் துறையிலே வழிகாட்டியாய் நின்ற பிறகுதானே மா சே துங் பொதுவுடமைக் கருத்துக்களோடு, அரசியல்-பொருளாதாரத் துறையிலே முன்னேற முடிந்தது-என்று நாம் பல்லாயிரக்கணக்கான மேடைகளிலே கொக்கரித்திருக்கிறோம். அப்போது கூட, செல்லரித்துப் போன கம்பராமாயணத்தின் கால்களிலே விழுந்து வணங்கும் கம்யூனிஸ்ட்டுகளுக்கு காது கேட்டதாகத் தெரியவில்லை!

இன்று திபேத் புதிய உதாரணமாகப் பரிமளிக்கிறது!

அங்கே அரசாளும் ஆண்டிகள் பகுத்தறிவுக்கு பரம்பரை வைரியாக இருக்கிறார்கள்!

இங்கோ ஆச்சாரியார் போன்ற 'அரசாண்ட அரசியல் ஆண்டிகள்' அன்றோ லாமா செய்கிற வேலையைச் செய்கிறார்கள்!

இதைக்கூட நாம் பொறுத்துக் கொள்ளலாம்! ஆனால் இங்கு நடந்தவைகள் நெஞ்சு துணுக்குறும் செயல்களாக அல்லவா இருக்கின்றன!

சூ-என்-லாய் லாமாவிற்குச் சாமரம் வீசியதாகக் கேள்விப் பட்டிருக்கிறோமா? மாசேதுங் மத வேதங்களின் முன்னால் மண்டியிடுவதாக, புறங்கூறிப் பிழைக்கும் அமெரிக்கப் பத்திரிகைகளிலாவது படித்திருக்கிறோமா?

இல்லை; இருக்கவே முடியாது! ஆனால், தென்னகத்திலே அந்தக் காட்சியைக் கண்கூடாகப் பார்க்கிறோம்!

மதவாதிகள் மீது கணை ஏவவேண்டிய கம்யூனிஸ்ட்கள், அவர்களுக்குத் துணையல்லவா போகிறார்கள்!

இருக்கலாமா இந்த நிலைமை? எதிர்க்காமல் இருந்தால்கூட நாம் பழிதூற்ற மாட்டோம். ஆனால் அவர்கள், எதிர்ப்போரின் குறுக்கே அல்லவா குன்று போல நின்று தடை செய்கிறார்கள்! மாம்பலத்து முனிவரையும் மிஞ்சுமளவுக்கு அல்லவா அவர்களது மதவாதப் பிரசங்கங்கள் நடைபெறுகின்றன!

சாக்கடையிலே சந்தனக் குழம்பைக் கலக்கப் பார்க்கும் கம்யூனிஸ்ட்கள், அந்த வேலை நடைபெறுவதற்கு முன்னர் சாக்கடையைத் தூர்க்க முயலுங்கள்—என்று சொல்லும் நம் பேருரையைக் கொஞ்சம் உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும்.

திராவிடத்தின் சமுதாயத் துறையிலிருந்து சற்றே விலகியிருக்கும் கம்யூனிஸ்ட் தோழர்களே! கம்ப ராமாயண கதா காலட்சேபங்களில் களிப்பு காணும் ஜீவானந்தர்களே! தென்னகத்தின் உண்மையான கம்யூனிஸ்ட்களாம் எங்கள் பாதையைக் கூட நீங்கள் பின்பற்ற வேண்டாம்! அதோ சூ-என்-லாய் காட்டும் பீக்கிங் பாதையைப் பாருங்கள்! மதமென்னும் போர்வையிலே மறைந்திருக்கும் பின்னணிக் கும்பலை பூண்டறுக்க-பொடிப் பொடியாக்க-உயர்த்திப் பிடியுங்கள், உங்கள் கறுக்கருவாளை! தூக்கிப் பிடியுங்கள் உங்கள் சம்மட்டியை!

# வான்கோழி...

★ 1-ம் பக்கத் தொடர்ச்சி

வார்கள்—பண்டிதர் தலை குனிந்துதான் தீரவேண்டும்!

✶

★ இப்போது நம்மை ஒரு புதிய ஆராய்ச்சியில் இழுத்து விடுகிறார் ஆச்சாரியார். இலங்கைப் பிரதமரின்மீது, ஆச்சாரியார் கடுமொழி வீசியது சரிதானா, இல்லையா என்று தெளிவதற்கு முன்பு—அவர் கையாண்ட உதாரணம் சரிதானா என்று ஆராயவேண்டும். மே 1-ந் தேதி 'கல்கி'யிலே ஆச்சாரியார் எழுதியிருப்பது இதுதான்:

"பாண்டுங்கில் கூடிய பிரதிநிதிகள் சிலர் அமெரிக்காவின் நெட்டுரு மாணவர்கள். முக்கியமாக இலங்கைப் பிரதமர் இந்தக் காரியத்தைச் செய்து விட்டார். இவருடைய பிரசங்கம், எழுதித் தயாரித்து வந்தது. பத்திரிகைகளில் பிரசுரம் ஆகியிருக்கிறது. அமெரிக்க நாட்டைச் சேர்ந்த ஒருவர்தானே இவர்—என்று கேட்கும்படியான நடையில் எழுதப்பட்டிருந்தது இவர் பிரசங்கம்."

இப்படித்தான் ஆச்சாரியார் எழுதியிருக்கிறார். அமெரிக்கா சொல்லிக் கொடுத்ததை, கற்றுக் கொடுத்ததை, பாண்டுங்கில் வந்து ஒப்புவித்தார் கொத்தலவாலை என்றால், அதற்கு ஆச்சாரியார் கூற வேண்டிய உதாரணம் என்ன? "சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளை" என்றல்லவா எழுதியிருக்க வேண்டும்!

மயிலைக் கண்டு ஆடும் வான்கோழி என்று அதே கல்கியில் அதே கட்டுரையில் அவர் குறிப்பிட்டது எப்படிப் பொருத்தமாகும்? ஆச்சாரியார் பெரிய எழுத்தாளர் என்று 'அவாள்' வட்டாரம் கூறுகிறது. உதாரணம் பொறுக்கத் தெரியாத இவர், உயர்ந்த எழுத்தாளராம்! 'நாமும் ஒரு உதாரணத்தைத் தருவோம்' என்று வான்கோழி நிலைமைக்கல்லவா அவரும் போய்விட்டார், பாவம்!

இலங்கை—வான்கோழி என்றால், அமெரிக்கா-மயில் என்று ஆகிறது! ஆச்சாரியார், அமெரிக்கரின் அணுகுண்டு ஆட்டத்தை அழகு மயிலாட்டம் என்று ஒத்துக் கொள்கிறாரா? தென் ஆப்பிரிக்கத் தலைவர் காட்டு மிருகத்தைப் போல நன்றாகப் பற்களைக் காட்டிப் பேசுகிறார் — என்ற கருத்தை முதல் 'பாரா'விலே கூறிவிட்டு, அடுத்த "பாரா"விலே இலங்கைப் பிரதமரின் போக்கு, கான மயிலாடக் கண்ட வான்கோழியின் போக்கு என்று வர்ணிக்கிறார். அப்படியானால், தென் ஆப்பிரிக்கத் தலைவரின் நிற வெறிப் பேயாட்டம் நீல மயிலின் ஆட்டம் என்று ஒத்துக்கொள்ள வேண்டும், ஆச்சாரியாரின் உதாரணப்படி!

அவர் தந்த உதாரணத்திலே அவருக்கே சந்தேகம் வருகிறது.

"வான்கோழி சரியான உவமை அல்ல; புலியைக் கண்டு பூனையும் அதுவாகப் பாவித்து மிரட்டுகிறது என்றால் சரியாக இருக்கும்" என்ற அவரே திருத்தமும் எழுதியிருக்கிறார். கொத்தலவாலை, வான்கோழியல்ல—புலி போல் நடிக்கும் பூனை—என்பதுதான் சரியான உதாரணம் என்று 1-ந் தேதி இதழிலே எழுதியவர், பிறகு மன்னிப்பு கேட்டு எழுதியபோது, "வான்கோழி என்று கூறியதற்கு வருந்துகிறேன்" என்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார். அப்படியானால், புலி போல் நடிக்கும் பூனை, என்பதுதான் சரியான உதாரணம்-என்பதை மறைமுகமாகக் காட்டுகிறாரோ என்னவோ, இந்த மன்னிப்பு மூலம்!—

✶

★ சரியான உதாரணமில்லை என்று தெளிவாகத் தெரிந்தும், அதை எழுதுவானேன்? மேடையில் பேசும் போது தவறி வந்து விட்டது; அதனால் அதை மறுத்து வேறு ஒரு உதாரணம் சொன்னார்—என்றால் ஒப்புக் கொள்ளலாம்! தாளில்தான் எழுதுகிறார்; அதை அடித்து விட்டு வேறு உதாரணம் எழுதக் கையிலே பேனா இருக்கிறது; இருந்துங்கூட அந்தப் பொருந்தாத உதாரணத்தை அப்படியே விட்டு விட்டார்—அச்சு வாகனமேறி அதுவும் வெளிவந்து விட்டது! இப்படி ஒரு "உதாரணத் தவறு" செய்வானேன், உயர்ந்த எழுத்தாளர் என்று எண்ணிக்கொண்டிருப்பவர்? அவருடைய எழுத்துக்கு ஒன்றிரண்டு உதாரணங்கள், இதோ!

★

★ "ஆபரணங்களை அணிய வேண்டிய அழகிய தேகமாக இருந்தது. ஆனால் ஆபரணமின்றி இருந்தது"

(சக்ரவர்த்தி திருமகன்—கல்கி. மே - 1. 1955)

பெண்ணின் அழகைப் பற்றிக் குறிப்பிடும் போது, கவிஞர்களும் புலவர்களும் **'அவள் அழகுக்கு ஆபரணம் தேவையில்லை'** என்றே குறிப்பிடுவார்கள். அப்படி ஆபரணம் அணிந்தாலும்—'அழகுக்கு அழகு செய்தாற்போல் இருக்கிறது' என்றே வர்ணிப்பார்கள். ஆச்சாரியாரோ, சீதையைப் பற்றிக் கூற வந்தவர், கூறும் முறை தெரியாமல், **"ஆபரணம் அணிய வேண்டிய அழகிய தேகம்"** என்கிறார். அணிந்தால்தான், அழகு வெளிப்படுமோ, என்று எண்ண வேண்டிய அளவுக்கு வாசகர்களைக் குழப்புகிறார் — ஆபரணமில்லாத அழகிய தேகம் என்று சொல்ல வேண்டியதை இவ்வளவு அழகாகக் கூறுகிறார்!

அவரது வாக்கிய அமைப்புக்கு இதோ ஒரு உதாரணம்-

"**பார்க்கப் பார்க்க** அந்தத் தங்க மேடையின் மேல் ஆபரணங்களின்றிக் கவலையும் பயமும் நிரம்பிய முகத்தோடு உட்கார்ந்திருந்த அந்த ஸ்த்ரீயின் தோற்றம் மெய்ப்பாடுகள் எல்லாம் **கவனித்து** அவளே சீதை என்பதாக **உறுதிகோண்டான்**"

(மே. 1-கல்கி)

வாக்கியத்தை கூர்ந்து கவனியுங்கள். இணைத்துப் படிக்க முடிகிறதா பாருங்கள்!

**பார்க்கப் பார்க்க-கவனித்து-உறுதி கோண்டான்.**

வாக்கியம் சரியாக அமைந்திருக்கிறதா?--இல்லை-இல்லை-நிச்சயமாக இல்லை! சொற்றொடர் எப்படி ஆரம்பமாகிறது—எப்படி முடிகிறது என்பதை நோக்க வேண்டுகிறோம்.

"ஹனுமான் இலைகளிடையில் மறைந்து **பார்த்துக்கோண்டும்**, இன்னது செய்வது என்று யோசித்துக் கொண்டும், கடல் மத்தியில் ஒரு பெருங்காற்றடித்து ஆடி அலையும் ஒரு பாரம் ஏற்றிய கப்பலைப்போல் கவலைக் கடலில் தத்தளித்துக் கொண்டிருந்த சீதையின் முகத்தை நன்றாய் **பார்த்துக் கோண்டிருந்தான்.**"

(மே. 1-கல்கி.)

சொற்றொடரின் அமைப்பைக் கவனித்தீர்களா?

**"பார்த்துக் கோண்டும், பார்த்துக் கோண்டிருந்தான்"**—இது என்ன தமிழோ? — என்ன எழுத்தோ? எமக்குத் தெரியவில்லை.

ஆச்சாரியாரின் சொற்றொடர்களை அப்படியே வெளியிட்டு—"பிழை திருத்துக" என்று மாணவர்களுக்கு பரிட்சை வைக்கலாம் போல் தோன்றுகிறது; அவ்வளவ பிழைபட எழுதுகிறார். அதன்விளைவுதான் ஒட்டாத உதாரணங்கள் — அதற்கு எடுத்துக் காட்டுதான் வான்கோழி உதாரணங்கூட!

இது போல ஆயிரமாயிரம் தவறுகள் ஆச்சாரியாரின் கட்டுரைகளிலே!

ஆனாலும், அந்த வட்டாரத்துக்கு ஆச்சாரியார் எழுத்துத் துறையிலே ஒரு "மயிலா"கக் காட்சி தருகிறார்!—தமிழ் கற்ற அறிஞருக்கோ அவர் எழுத்து வான்கோழி நடனமாக இருக்கிறது!

★ தொடர்ச்சி 10-ம் பக்கம்

## ★ மகாபாரதம் - [தொடர் சித்திரம்] - 9 ★





# ஹெர்குலஸ்

## கிரேக்க புராணம் (5)

பீமன்; கடோற்கஜன்; பகாசுரன்—ஆகியோரின் வரிசையிலே கிரேக்க புராணத்து ஹெர்குலசும் சேர்ந்து கொள்கிறான். விண்ணிலும், மண்ணிலும் அவனை எதிர்த்து நிற்பதற்கு ஒருவருமேகிடையாது. அவன் கைவரிசையைக் காட்டினால் கடல் அலைகள் அமைதி வழங்கும்; இருட்டு அரசன் வெளிச்சத்திற்கு வழிவிட்டு ஓடிவிடுவான். மதங்கொண்ட யானையா? சினங்கொண்ட வேங்கையா? இவையெல்லாம் அவன் புஜவலிமைக்கு முன்னே தூள் தூளாகிவிடும். அவன் மூச்சடக்கி ஒரு பெருமூச்சு விட்டால், இரத கஜ துரகபதாதிகள் அனைத்தும் இருந்த இடம் தெரியாமல் மறைந்து போகும்.

—இத்தகைய வலிமை மிக்க வீரன்—திண்தோள் தட்டி மலை நிகர்த்தோரை மண்மேடாக்கும் தீரன்-மனிதனா? தேவகுமாரனா?—என்று எண்ணத் தூண்டுகிறதல்லவா? சந்தேகமில்லை; ஹெர்குலஸ் கிரேக்க புராணப்படி மனிதப் பிறவிதான். ஆனாலும் அவன் தந்தை வழியிலேதான் ஒரு 'தெய்வாதீனம்' குறுக்கிட்டு விட்டது.

தீபஸ் நகரத்திலே ஆம்பிட்ரியன் என்னும் தளகர்த்தனொருவன் வாழ்ந்து வந்தான். நாட்டு எல்லையிலே பகை முரசு ஒலித்த காரணத்தால், போர்த் தொழில் புரிய ஆம்பிட்ரியன் இரணகளம் புகுந்து விட்டான். நாட்டோரத்தில் ஈட்டிகள் மோதும் ஒலி கேட்கும்போது வீட்டிலே வேல்விழி யொருத்தி வாடினால் என்ன? போர் முரசம் ஒலிக்கும் போது போகச் சேறுக்கிலே புகுந்து கொண்டிருப்பவன் கோழையன்றோ? ஆம்பிட்ரியன் அத்தகையோர் பட்டியலிலே இடம் பெற விரும்பினானில்லை. அழகுமொழியுதிர்த்து, தன் அணைப்பிலே எந்நேரமும் பூட்டி வைத்திருக்கும் பூவையாம்— பேரழகு கொட்டும் புது நிலவாம்—தன் அருமை மனைவி ஆல்க்மீனாவை விட்டு விட்டு, கச்சை கட்டி களம் புகுந்து விட்டான்.

ஆல்க்மீனா அழகி என்று கேள்விப்பட்டும், கடவுளர் தலைவனும், காமுகர் தளபதியுமான சியசா சும்மாயிருப்பான்? அவன் தான் சோரபோகப் பிரியனாயிற்றே! அவளை அரும்பாடுபட்டாவது கூடிவிட நிர்மானித்தான்.

அதன் பிறகு?

ஒரு நாள் இரவு-ஆந்தையும் தூங்கும் அர்த்தசாமத்தில் ஆல்க்மீனா வீட்டுக் கதவு என்றுமில்லாத அவசரத்தோடு தட்டப்பட்டது. மீனா கதவு திறக்கு முன்னரே, "அன்பே! ஆருயிரே! அருமருந்தே!"—என்கிற வார்த்தைகள் அவள் செவிகளிலே தேன் பாய்ச்சின; அவள் தேகமெங்கும் பூரிப்பு பொங்கியது!

மீனா கதவைத் திறந்தாள். ஆம்; ஐயத்திற்கிடமில்லை. அங்கே நிற்பது அவள் கணவன் ஆம்பிட்ரியன்தான்! அடக்கி வைத்திருந்த ஆவல் அணையுடைத்துக் கிளம்பியது. பிறகு?...ஆலிங்கனம்; ஆர்ப்பாட்டம்; சரசம்; சல்லாபம்; உல்லாசம்; லீலைகள்...அன்றிரவு, அவர்களிருவருக்கும் மறக்க முடியாத இன்ப இரவாக மாறியது! மறுநாள் பொழுது விடிவதற்கு முன்னரே அவள் கணவன் காமக் களத்திலிருந்து போர்க்களத்துக்குக் குடியேறிவிட்டான்!

ஆமாம்; அப்படித்தான் குழந்தையுள்ளம் படைத்த மீனா நினைத்துக் கொண்டிருந்தாள். கணவனுருவிலே வந்து—மலர் முகர்ந்து—மணம் முகந்து சென்றவன் கோணல் நடத்தையின் வித்தகனும் சீயஸ் என்று புராணம் எழுதிய பண்டிதனுக்குத் தவிர, வேறு யாருக்குத் தெரிய முடியும்?

தளகர்த்தன் மனைவிக்கும், கடவுளர் தலைவனுக்கும் அந்தக் கள்ள இரவிலே கரு உதித்தவன் தான் ஹெர்குலஸ். சிறுவயதிலே அந்தக் குழந்தை செயற்கரிய காரியங்கள் பலவற்றைச் சாதித்து, நாட்டு மக்களை—பெற்ற தாய் 'தந்தை'யரை திகைப்பிலாழ்த்தியது.



ஒருநாள் மீனா வெளியே போயிருக்கும்போது, இரண்டு மலைப் பாம்புகள் குழந்தை ஹெர்குலஸ் தூங்கிய தொட்டிலை வட்டமிட்டதாம். படமெடுத்துவரும் பாம்புகளைப் பார்த்து ஹெர்குலசின் அண்ணன் அலறினானாம். ஆனால், குழந்தை ஹெர்குலஸ் சிரித்துக் கொண்டே அந்தப் பாம்புகளின் கழுத்தைப் பிடித்து கசக்கியெறிந்து விட்டானாம். அந்தப் பாம்புகள் தன்னுடைய கணவனின் குழந்தையாம் ஹெர்குலசைக் கொல்ல சீயசின் மனைவி ஹீராவால் அனுப்பப்பட்டவை என்றுகூட சிலர் சொல்லுகிறார்கள். தொட்டாற் பருவத்திலேயே பாம்புகளிரண்டை பரலோகத்திற்கு அனுப்பினானென்றால், ஹெர்குலசின் வலிமை எத்தகையது என்று ஒரு கணம் எண்ணிப் பாருங்கள்!

ஹெர்குலஸ் மாமிச பர்வதமாக இருந்தாலும் அவனுக்கு மனமென்று ஒன்று இருந்தது. அவன் கொலைவெறி கொண்ட மிருகமாக மாறாமலிருக்க அவன் மனதிலே இரக்கமென்ற ஒரு பொருளையும் கிரேக்கப் பாவாணர்கள் திணித்துவைத்திருந்தார்கள். உயிர்களிடத்து அத்தகைய அன்பும் அனுதாபமும் இல்லாவிடில், அத்தகைய வீரனை யாரால்தான் அடக்க முடியும்? எனவேதான் அவனுக்குக் கல் உடலும், கனிவான நெஞ்சமும் கொடுக்கப்பட்டிருந்தது.

தான் செய்தது தவறு என்று தெரிந்து விட்டால்—அல்லது யாராவது அவனுக்கு விளங்கும்படி உணர்த்தி விட்டால் - ஹெர்குலஸ் யார் கொடுத்த தண்டனையையும் ஏற்றுக் கொள்வான். அப்படி யாரும் தண்டனை கொடுக்க முன்வராவிட்டால், தானே தனக்கு தண்டனை வழங்கிக் கொள்வான்! களங்கமில்லாமல் வாழ வேண்டுமென்பதிலே அவனுக்கு அவ்வளவு அக்கறை!

ஹெர்குலஸ், தன் கணவனுக்குப் பிறந்ததால் ஹீராவுக்குக் கோபம் என்று முன்பே குறிப்பிட்டோமல்லவா? தன் சக்களத்தி மகனை அவனுக்குக் கல்யாணமாகி, குழந்தை குட்டிகளுக்கும் தந்தையாகி பெருவாழ்வு வாழ்வது அவளுக்குப் பொறுக்கவில்லை. தெய்வமாக இருந்தாலும் அவளும் பெண்தானே! அவளுக்குப் பழி வாங்கும் உணர்ச்சி வளர்ந்து கொண்டேயிருந்தது!

திடீரென்று ஒருநாள் ஹீரா யாராலும் போக்கமுடியாத ஒரு சித்த பிரேமையை ஒரு சில நிமிடங்களுக்கு ஹெர்குலஸ்மீது ஏவிவிட்டாள். அவ்வளவுதான்! யானைக்கு மதம் பிடித்தால் என்ன ஆகும்?

மூளைக் கோளாறு கொண்ட ஹெர்குலஸ் ஒரு நொடியில் தன் மனைவியின் கழுத்தைப் பிடித்து நெறித்து, அவள் கூக்குரலைக் காது கொடுத்து கேட்காது கொன்றுபோட்டான். சின்னஞ் சிறிய குழந்தைகளை வாளுக்குப் பலியாக்கினான்!

ஹீராவின் முன்னேற்பாட்டின்படி திடீரென்று அவனுக்கு பிரேமை தெளிந்தது. நினைவு வந்தவுடன் வாஞ்சை குலுங்க மனைவியை அழைத்தான்; கொஞ்சி விளையாடக் குழந்தைகளை அழைத்தான். எப்படி வருவார்கள்? அவர்களைத்தான் அவன் சற்று முன்னர் சுடுகாட்டிற்கு அனுப்பி விட்டானே!

ஒரு கணம் ஹெர்குலஸ் இரத்த ஓடையிலே மலர்ந்திருக்கும் தன் மனைவியின் முகத்தைப் பார்த்தான்; சாவிலும் சிரித்துக்கொண்டிருக்கும் தன் மழலைச் செல்வங்களைப் பார்த்தான்! போர்க் களத்திலே—பிணக் குவியலிலே ஏற்படாத மயக்கம் இப்போது அவனைக் கௌவிக் கொண்டது. வாழ்க்கையில் முதன் முறையாக அவன் சித்தம் சோர்ந்தான்! தன் பாவங்களை எப்படியாவது கழுவிக்கொள்ள வேண்டுமென்று கருதினான். உடன் ஓடோடி டெல்பிக்குச் சென்று, அங்கு உட்கார்ந்திருக்கும் 'வரும் பொருள் உரைப்பவ'ரைக் கலந்து ஆலோசித்தான். அவரோ மைசினா நாட்டு மன்னன் யூரிஸ்தியசிடம் செல்லும்படியும், அவனிட்ட கட்டளைகளை நிறைவேற்றினால், அவன் பாப விமோசனம் அடைந்து விடலாமென்றும் விடையளித்தார்.

இந்த நேரத்திலேதான் ஹீராவின் மூளை பலமாக வேலை செய்ய ஆரம்பித்தது. ஹெர்குலஸ் தானாகவே தண்டனையை ஏற்றுக்கொள்பவன் என்று தெரிந்ததும், அவள் மைசினா நாட்டு அரசனோடு சேர்ந்து சூது செய்தாள். அரசனும் அவளது சூழ்ச்சிக்கு உற்ற துணை நின்று ஹெர்குலசின் பாப விமோசனத்திற்காக பன்னிரண்டு செயற்கரிய காரியங்களைச் செய்து முடிக்குமாறு ஆணையிட்டான். அவைகளிலே ஆபத்து நிறைந்திருப்பது தெரிந்திருந்துங்கூட ஹெர்குலஸ் அவைகளைச் செய்து முடிப்பதாக ஒப்புக்கொண்டான். அவன் வெற்றிகரமாகச் செய்து முடித்த பன்னிரண்டு செயல்களும் நம் நாட்டிலே வழங்கப்படும் "பகிரதப் பிரயத்தனம்" என்னும் சொற்றொடரைப்போல 'ஹெர்க்குலசின் வேலைகள்' என்று ஆங்கில மொழியிலே இன்று வழங்குகிறது.

அதன்படி ஆயுதங்களுக்கெல்லாம் சாகாத நெமியா என்னும் கொடுமை வாய்ந்த சிங்கத்துடன் போராடி, இறுதியில் அதன் குரல்வளையை நெறித்துக் கொன்றான்.

★ தொடர்ச்சி 8-ம் பக்கம்

## 23.

## மர்மக் கிழவர்




துரை சொன்ன கதை முழுவதையும் கூர்ந்து கவனித்து வந்த கிழவர், திடீரென்று மயக்கமுற்று சாய்ந்த காரணம் தெரியாமல் துரையும் பரிமளமும் திகைத்து விட்டார்கள். அவரைத் தூக்கி எடுத்து மயக்கம் தெளிவதற்கான சிகிச்சைகளை செய்யத் தொடங்கினார்கள் கிழவரின் உடல் முழுதும் வியர்வையால் நனைந்தது. சுருக்கம் விழுந்த அவரது நெற்றியிலே வியர்வைத் துளிகள் முத்துமுத்தாய் உருண்டன. பரிமளா கொண்டு வந்த தண்ணீரில் துண்டை நனைத்து அதை அவரது முகத்திலே ஒத்திக் கொண்டேயிருந்தான் துரை. சிறிது நேரத்திற்கெல்லாம், கிழவர் அசைந்து படுத்தார். மெதுவாக விழிகளைத் திறந்தார்.

“பெரியவரே! பெரியவரே!” என்று துடிதுடிப்போடு துரை அவரைக் கூப்பிட்டுப் பார்த்தான். எழுந்து உட்கார்ந்து கொள்ள விரும்புவதாக அவர் ஜாடை காட்டினார். துரையும், பரிமளாவும் அவரைத் தூக்கி நாற்காலியிலே உட்கார வைத்தனர். நாற்காலியிலே சாய்ந்தபடி கிழவர் பெருமூச்சுவிட்டார். “ஏன் திடீரென்று மயக்கம் வந்தது? வழக்கமாக வருமா?” என்று கேட்டாள் பரிமளா. ‘வராது’ என்பதை யுணர்த்த அவர் தலையை அசைத்துக் காட்டினார். “நான் சொன்ன கதையினால் ஒரு வேளை, உணர்ச்சி வசப்பட்டு விட்டீர்களோ?” என்று ஆவலாகக் கேட்டான் துரை.

‘ஆமாம்’ என்று மெதுவாக உதடுகளை அசைத்தார்—‘உம்’ என்று முனகிக் கொண்டார்.

‘இப்படித் தெரிந்தால் நான் சொல்லியிருக்க மாட்டேனே; இந்தக் கதையை’—என்று தனக்குத்தானே வருத்தப்பட்டுக் கொண்டான் துரை. “சொன்னதால் தவறொன்றுமில்லை துரை” என்று கூறிவிட்டு, மீண்டும் ஒரு நீண்ட பெருமூச்சு விட்டுக் கொண்டார் அந்த மர்ம மனிதர் மாயாண்டி.

“ஏதோ ஒரு வேதனையை மூடி மறைக்கிறீர்கள்— அது என்ன என்பதை எங்களிடம் சொல்லக் கூடாதா?”—துரை கலக்கத்தோடு கேட்டான்.

“சொல்லுகிறேன் — சொல்லத்தான் போகிறேன்!”

“இப்போது வேண்டாம்— களைப்பாயிருந்தால், பிறகு சொல்லுங்கள்”— இது பரிமளம்.

“இல்லையம்மா- இப்போதே நான் சொல்லித் தீர வேண்டும். அப்போதுதான் என் மனதிலுள்ள சுமை குறையும்.”

அவரது உதடுகளையே உற்று நோக்கிய வண்ணமிருந்தனர் துரையும் பரிமளமும். கிழவர் கனைத்துக் கொண்டார். ஏதோ ஒரு பெரிய ரகசியத்தை வெளியிடப் போகிறார் என்பதற்கான பீடிகையாக இருந்தது அவரது அசைவு.

“துரை! தள்ளாத வயதுடைய தன் தாயாரையும், பத்து வயது பாலகன் உன்னையும், ஐந்து வயதுள்ள அருப்பு உன் தங்கையையும் தவிக்க விட்டு விட்டுச் சிறைகோட்டம் புகுந்தானே குமாரவடிவு; அவனுடைய வாழ்க்கை ஏட்டை கொஞ்சம் புரட்டிக் காட்டுகிறேன்; கவனமாகக் கேள்!”

“என்ன? என் தந்தையின் வாழ்க்கை ஏடா?”

“ஏடா அது? சோகமேடு! சுகம் நுழைய முடியாத காடு! வாழ்ந்து கெட்டவனாக இலங்கைக்குச் சென்றான் குமாரவடிவு-கொலைகாரனாக சிறைக்குள்ளே நுழைந்தான் – ஞானி போல வெளியே வந்தான்”

“என்ன சொல்லுகிறீர்கள்? அப்படியானால்... தாங்கள்...” என்று ஆவல் நிறைந்த குரலில் இழுத்தாற் போலக் கேட்டான் துரை.

“குமாரவடிவு, மனைவியைக் கொலை செய்ததாகக் குற்றஞ் சாட்டப் பட்டான். வள்ளிக் கிழங்கை வெட்ட வேண்டுமென்று எழுதப்பட்டிருந்த டைரிக் குறிப்பு அவனைக் கைதியாக்கியது. அவனைப் பற்றி உனக்குத் தெரிந்த கதைகள் முழுவதையும் என்னிடம் சொல்லிவிட்டாய். அவன் சிறகொடிந்த பறவைபோல கூட்டுக்குள்ளே அடைபட்டுத் தவித்தபோது, பறவைக் குஞ்சுகள் வெளியிலே பாதகர்களால் வேட்டையாடப்பட்ட பயங்கரச்சம்பவங்கள் அவனுக்குத் தெரியாது. ஆயுள் தண்டனை அடைந்த கைதி குமாரவடிவு—உனக்குத் தெரியுமோ என்னவோ — சிறைச் சாலை விதிப்படி, ஆயுள் தண்டனை என்பது சாகும் வரையிலே சிறையிலே கிடப்பது என்பதல்ல என்ற விஷயம்! ஆமாம் துரை; சாகும் வரையிலே இருக்கவேண்டிய அவசியமில்லை. முழுவதும் சாவதற்கு முன்பு அந்தக் கைதிகளுக்கு நிச்சயம் விடுதலை உண்டு. கைதியின் நடத்தைக்குத் தக்கவாறு நாட்குறைப்பு—கடைசியாக ‘போர்டு’ என்று ஒன்று கூடி, அதிலே ஓரிரு வருடங்கள் தள்ளுபடி — ஆண்டுதோறும் உள்ள விடுமுறைக் கணக்கு—ஆகிய இந்த வகைகளிலே ஏழெட்டு ஆண்டுகள் தண்டனைக் குறைக்கப்பட்டு, ஆயுள் தண்டனை அடைந்த கைதிகள் பத்து பனிரெண்டு வருடங்களில் விடுதலைபெற இயலும். அதுபோலத்தான் குமாரவடிவும் விடுதலை பெற்றான். சிறைச்சாலையிலேயிருந்து அவன் வெளியிலே வரும்போது ஏறத்தாழ உனக்கு இருபது அல்லது இருபத்திரண்டு வயதாகியிருந்திருக்கலாம். வெளியிலே வந்த குமாரவடிவு, உன்னையும் உன் தங்கையையும் தேடித் தேடி அலைந்தான். கொலைகாரனுக்கு யார் சரியான பதில் சொல்லப் போகிறார்கள்! சிறைச் சாலையிலே பித்தனைப் போல் அலைந்து கொண்டு, சிறை அதிகாரிகளிட்ட வேலைகளைச் செய்து கொண்டு, ஓய்வு நேரம் முழுவதையும் உங்களைப் பற்றி நினைப்பதிலேயே செலவிட்டுக் கொண்டிருந்த குமாரவடிவுக்கு— நீங்கள் போன இடம் தெரியவில்லை என்றால் எப்படியிருக்கும்! தான் பெற்ற செல்வங்களைக் கண்டு களிக்கலாம்; வளர்ந்திருப்பார்கள் — வனப்பு மிகுந்தவளாயிருப்பாள் தங்கம்—வாலிபக் காளையாகத் திகழ்வான் மகன்-வாரியணைத்து மகிழலாம் என்று இன்பக் கனவுகள் பல கண்டிருப்பானே அவன்— அந்தக் கனவுகள் எல்லாம்— அவனது விடுதலையால் கலைந்து விட்டன என்கிறபோது எவ்வளவு வேதனைப் பட்டிருப்பான்; அவன் சிறையிலே எத்தனையோ வகைக் கைதிகள் இருப்பார்கள். பெரும்பாலும் மனைவியைக் கொலை செய்தவர்களின் கணக்கு அதிகமாகவேயிருந்தது குமாரவடிவு இருந்த சிறைச்சாலையிலே! — கூடிப் பேசும் நேரங்களிலே அவர்கள் தங்களது சிறைபுகு படலத்தைப்பற்றிய கதைகளை அவிழ்த்து விடாமல் இருக்கமாட்டார்கள்.

“சோர புருஷனோடு கூடிக் கிடந்தாள். சொரணையுள்ளவன் அதை அனுமதிக்க முடியுமா? தீர்த்துக் கட்டி விட்டேன்; திட்டிய அறிவாளால்!” என்று வீராப்பு பேசுவான் ஒரு கைதி!

“தாயார் வீட்டிலேயே தான் இருப்பேன். உனக்கு தாகமாக இருந்தால், இங்கு வந்துபோ—என்று சட்டம் பேசினாள்--தாலிகட்டியவனுக்குப் பொறுக்குமா? தரையோடு தலையை மோதி மோதிக்கொன்றேன்” என்று ஆத்திரத்தோடு கூறுவான், இன்னொரு கைதி

“அய்யோ அத்தான்! உங்களை விட்டு எப்படிப்பிரிவேன்- என்று தேம்பி அழுது விடைகொடுத்தாள். ஊருக்குப்போவதாக போக்குகாட்டி, இரவோடு இரவாகத் திரும்பி வீட்டுக்குப் போனேன். கள்ள புருஷனோடு கட்டிப் புரண்டாள் என்னுடைய கற்புக்கரசி. கண்டேன் அந்தக்காட்சியை! பிறகென்ன; கையே கத்தி!-அவ்வளவுதான்- காதலர் இருவரும் கூண்டோடு கைலாசம்” என்று பழிவாங்கிய கதையை உற்சாகத்தோடு உரைப்பான் இன்னொரு கைதி!

“ஆசைநாயகனும் அவளும் சேர்ந்து சொந்தப் புருஷனை

என்னையே தீர்த்துக்கட்ட திட்டம் போட்டார்கள்-நடக்குமா என்னிடம்? ஒருநாள் இரவு—என் மனைவியும் அவனும் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தார்கள். இதுதான் சமயமென்று இருவர் தலையையும் வெட்டினேன். தலைகள் இரண்டையும் தேங்காய் போல முடிந்து ஒரு கம்பிலே தொங்க விட்டு, தோளிலே வைத்துக் கொண்டு, நேரே நீதி மன்றத்திலே நுழைந்தேன். நீதிபதி மயக்கம் போட்டு விழுந்தார்—போலீஸ் இன்ஸ்பெக்டர்கள் நடுக்கிட்டுப் போனார்கள்—அவர்களுக்கெல்லாம் நான் ஆறுதல் சொன்னேன். நான் செய்த நல்ல காரியத்துக்குத் தான் இந்தப் பரிசு" என்று கண்களிலே பொறி பறக்கக் கத்துவான் ஒரு கைதி!

"நான் ஒரு முட்டாள்! துரோகி! பாதகன்! வீணாக என் துணைவியின் மீது சந்தேகப் பட்டு, அவளைக் கொலை செய்தேன். அவள் உத்தமி-பதிவிரதை"-என்று கண்ணீர் வடிப்பான் ஒரு கைதி! இப்படிக் கொலை செய்ததை ஒத்துக் கொள்ளும் கைதிகளின் கூட்டத்திலே—குமாரவடிவு மட்டுமே பொய்யன் என்ற பட்டப் பெயரை வாங்கிக் கொண்டான். வள்ளியை வெட்டவேண்டும் — என்பது கிழங்கைத்தானய்யா; மனைவியை அல்ல—என்று குமாரவடிவு உரக்க உரக்கச் சொல்லியும் கைதிகள் கேட்டார்களில்லை. 'சும்மா-புளுகாதே!" என்று கிண்டல் செய்து—அவன் நெஞ்சத்தை துளைத்தார்கள். இதெல்லாம் சில மாதங்கள்தான்! — பிறகு குமாரவடிவு சாதாரண கைதி நிலையிலேயிருந்து மேஸ்திரி கைதியாக உயர்த்தப் பட்டான்.

அதன் பிறகு கைதி வார்டர் பதவியையும் ஏற்றுக் கொண்டான். கைதி வார்டர் என்றால், சிறைக்குள்ளேயே கொஞ்சம் கௌரவமான உத்தியோகம். அந்த உத்தியோகத்திற்கு சம்பளமே—தண்டனை நாள் குறைப்புத்தான்! ஆனால் அதிகமாகத் தூங்க முடியாது. நினைத்த சமயம் படுக்க முடியாது. இரவு பகல் எல்லா நேரத்திலும் வேலையிருக்கும். அந்த வேலையில் சிறு தடங்கலும் ஏற்படக் கூடாது. கஷ்டப் படுவதற்கேற்ற பயனிருக்கிறது. அதுதான் நாட் குறைப்பு என்றேனே; அது!

உலகத்தின் எங்கேயோ ஒரு மூலையிலே— குறிப்பிட்ட அளவு மட்டும் நடக்கலாம்; அந்த வேலியைத் தாண்ட முயன்றால் வேதனைக்காளாக நேரிடும்- என்ற உத்திரவுக்குப் பணிந்து, நடைப் பிணம் போல வாழ்க்கையை நகர்த்தும் எண்ணற்ற மனிதர்கள்- அந்தப் பயங்கர நாட்களிலே ஒரு நாள் குறைந்தாலும் அதை மகிழ்ச்சியோடுதானே வரவேற்பார்கள்! அப்படித்தான் குமாரவடிவு நாட்களை எண்ணிக் கொண்டு வந்தான். விடுதலை பெற்ற பிறகுதான் அவனுக்குத் தோன்றியது, சிறையிலேயே ஆயுள் முழுவதையும் ஓட்டியிருக்கலாமே என்ற எண்ணம்! இனி என் செய்வது? வர மாட்டேன் என்றாலும் விட மாட்டார்கள் — ஒரு நாள் இருந்துவிட்டுப் போகிறேன் என்றாலும் அனுமதிக்க மாட்டார்கள்—அப்படிப்பட்ட இடமல்லவா சிறைச்சாலை!

சிறிய சிறையிலேயிருந்து, உலகமென்னும் பெரிய சிறைக்கு வந்த குமாரவடிவு, இலங்கைத் தீவிலே சில நாள் அலைந்தான். பிறகு இந்தியாவுக்கு வந்து சேர்ந்தான். மகனும் மகளும் இனி அகப்பட மாட்டார்கள் என்ற தீர்மானத்துக்கு அவனே வரும்வரையில் அவர்களைத் தேடித் திரிந்தான். தமிழகத்து மண்ணை, குமாரவடிவு தனது கண்ணீரால் நனைக்கும் போதெல்லாம்—இதே மண்ணில் நீ நாடக



மாடிக் கொண்டிருப்பதும்—உன் தங்கை நீண்ட துயில் கொண்டிருப்பதும், அவனுக்குத்தெரியாது. எப்படித் தெரிய முடியும்? தெரிந்துகொள்ளும் வாய்ப்புதான் ஏது?

குடும்பப் புத்தகத்தை செல்லரித்துவிட்டது-ஒரே ஒரு ஏடு குமாரவடிவு மட்டுமே காலக் காற்றிலே புழுதியோடு சேர்ந்து பறந்து கொண்டிருக்கிறான்-என்று தனக்குத்தானே அவன் சொல்லிக் கொள்வான்.

அப்படிப் பறந்து கொண்டிருந்தவன்—கிராமம் தோறும் பயணம் நடத்தி, புதிய தத்துவங்களை உபதேசம் செய்யும் ஞானியாக மாறினான்-ஆமாம், ஞானியென்று அவன் தன்னை எண்ணிக்கொண்டான்; யாரோ ஒரு பைத்தியக்கார வேதாந்தி என்று ஊரார் அவனைப் பரிகாசம் செய்தனர். அவன் அதற்காகக் கவலைப்படவில்லை. தான் கண்டுபிடித்ததாகக் கருதும் கருத்துக்களை, யாரிடமாவது சொல்லித் தீரவேண்டும்என்று அவன் ஆசைப்பட்டான். அவனது உபதேசங்களை மக்கள் காது கொடுத்துக் கேட்டதற்குக் காரணமே வேறு! அவன் வைத்தியத் தொழிலிலே நிபுணன் என்று பெயர் வாங்கி விட்டான். தேயிலை இலைகளைப் பறித்த குமாரவடிவு இப்போது மூலிகைகளைப் பறித்து மருந்து செய்யும் சித்த வைத்தியராக மாறினான்.

இந்தத் திறமையை அவன் சிறையிலே பெற்றான். மருத்துவத்திலே மகா நிபுணன் ஒரு கைதி—அவனிடம் பெற்ற பாடம், குமாரவடிவின் வயிற்றுக்கு உதவி புரிந்தது. மருத்துவ குமாரவடிவின் பாதையிலே ஒரு புதிய திருப்பத்தை அளித்தது மருங்கப்பள்ளம் கிராமம்—ஆமாம் துரை!—உன்னுடைய தங்கை மண்ணோடு கலந்து கிடக்கிறாளே; அந்த மருங்கப்பள்ளம்தான்—உன் தந்தையின் பாட்டையையும் மாற்றியது என்கிறேன்! எழுபது கோடி பசும் பொன் மறைந்து கிடக்கிற இடம் மருங்கப்பள்ளம். எழுபது கோடி இல்லா விட்டாலும்; ஏதோ கொஞ்சமாவது இருக்கத்தான் வேண்டும். அந்தப் புதையலைத் தேடி யார் யாரோ அலைகிறார்கள் என்பது உண்மைதான். குழந்தையை பலி கொடுத்து கொடுமை புரிகிற அளவுக்கு ஒரு சாமியாருக்குப் பொன்னாசை வளர்ந்திருக்கிற தென்றால்; மற்றவர்களைப்பற்றி கேட்கவா வேண்டும்?—நடுக்கடலிலே எங்கள் தோணியை நீ வழிமறித்தாயே, அந்தத் தோணியிலிருந்த ஐயப்பன் என்ற முரட்டுப் படகோட்டி கூட அந்தப் புதையலுக்காக நாக்கைத் தட்டிக் கொண்டிருப்பவர்களிலே ஒருவனுவான். ஐயப்பனை போலவே பலர் அந்தப் புதையலை சாப்பிடப் பல் துலக்கிக் கொண்டிருக்கிறார்கள். அத்தகைய புதையலைப் பற்றிய ரகசியம்—அதை எடுக்கக் கூடிய வழி—அனைத்தும் அடங்கிய ஒரு சேப்பேடும்—ஒரு சிறு கல்லும்—உன் தந்தையிடம் கிடைத்து விட்டது"

"கிடைத்துவிட்டதா? புதையலைப் பற்றிய குறிப்பா? எப்படி?" என்று துடிப்போடு கேட்டான் துரை.

"பொறு--சொல்லுகிறேன்!" என்று கனைத்துக் கொண்டு பேச்சைத் தொடர்ந்தார் கிழவர்.

"புதையலை எடுக்கும் வழியும் வகையும் கிடைத்து விட்டது—அதை எடுத்து என்ன செய்வது? யாருக்காக அதை எடுக்க வேண்டும்?—என்ற கேள்விகள் குடைய ஆரம்பித்தன குமாரவடிவை!"

கிழவர் பேச்சை முடிக்கவில்லை. அதுவரையிலேஅவரது பேச்சை ஆவலோடு கேட்டு வந்த துரை, இப்போது சிறிது அவசரப்பட்டுவிட்டான்—மர்மக் கிழவர், மாயாண்டி தான் தன்னுடைய தந்தை என்று முடிவுகட்டி—அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் அவரது உள்ளத்தில் உள்ளவை அனைத்தையும் தெரிந்து கொள்ள விரும்பியிருந்த அவன் ஏனோ திடீரென்று அவசரப் பட்டு—

"புதையலை யாருக்காக எடுக்கவேண்டும்? எனக்காகத் தான்-உங்கள் மகனுக்காகத் தான்!" என்று கத்திவிட்டான். பரிமளாவும், திகைத்துப் போனாள்; கிழவர் மரம் போலிருந்தார்.

"அப்பா! அப்பா!" என்று அவரை அணைத்துக் கொண்டு அழுதான் துரை.

"நான் உன் தந்தை குமாரவடிவு அல்ல-அவன் இறந்து விட்டான்! உண்மைதான்-நான் சொல்வதை நம்பு—அவன் இறந்து விட்டான்"—என்று கூவினார் கிழவர்.

'உண்மையாகவா? நீங்கள் என் தந்தையில்லையா?"-துரை துடித்தான்.

"இல்லை!"

"பிறகு நீங்கள் யார்?"

"உன் தந்தை குமாரவடிவின் நண்பன்— சிறைச்சாலைத் தோழன்-விடுதலை அடைந்த பிறகு நானும் அவனுமே நண்பர்களாக வாழ்ந்தோம். குமாரவடிவு சாகும்வரையிலே நான் அவனைப் பிரியவேயில்லை!" என்று கூறி கண்ணீர் வடித்தார் மாயாண்டி.

[வளரும்]

அடுத்த இதழில்....
சக்கரவர்த்தியின்
திருமகன்

## கிரேக்க புராணம்......

★ :-ம் பக்கத் தொடர்ச்சி

ஆஜியன் என்பவனுக்கு லட்சோப லட்சம் கால் நடைகள் உண்டு. அவைகள் தங்கியிருக்கும் கொட்டடி பல நூறு ஆண்டுகளாகக் கழுவிச் சுத்தம் செய்யப்படாமலேயே இருந்தது. மைசினு நாட்டு அரசனே ஒரு இரவில் அந்தக் கொட்டடியைக் கழுவிச் சுத்தம் செய்யும்படி உத்தரவிட்டான்.

ஒரு இரவில் முடிகிற காரியமா அது? இருந்தாலும் ஹெர்குலஸ் சளைக்கவில்லை. உடன் அந்த வட்டாரத்தில் வெள்ளப் பெருக்கெடுத்து வேகமாக ஓடிக் கொண்டிருந்த இரு பெரிய நதிகளை ஹெர்குலஸ் மிகவும் கஷ்டப்பட்டு, ஆஜியனின் கொட்டடிப் பக்கம் திருப்பிவிட்டான்.

ஒரு நொடியிலே ஆஜியன் கொட்டடி-ஆபாசங்களின் இருப்பிடம்—சலவைக்கல் கட்டடமாகிவிட்டது! இந்தச் செயல் கேட்டு ஹிராதேவியே திகைத்து விட்டாளாம்!

இப்போது ஹெர்குலசுக்கு இன்னும் கடினமான வேலைகள் கொடுக்கப்பட்டன. ஹெஸ்டரீபீஸ் வைத்திருக்கும் தங்க ஆப்பிள்களைக் கொண்டு வரும்படி உத்தரவு பிறந்தது. ஹெர்குலசுக்கு அப்போலோ கடவுளின் அப்பா தான் ஹெஸ்பரிபீஸ் என்பது தெரியுமே தவிர. தங்க ஆப்பிள்கள் எங்கு இருக்கின்றனவென்று தெரியாது. இது சம்மந்தமான செய்திகளை அறிவதற்கு ஹெர்குலஸ் அப்போலோவைத் தேடிச் சென்றான்.

அப்போலோதான் உலகத்தைத் தன் தோளிலே சுமந்து கொண்டிருக்கிறானே! அவனிடம் சென்று ஆப்பிள்கள் எங்கு இருக்கின்றனவென்ற விபரம் குறிப்பிடும்படி கேட்டுக் கொண்டான்.

அப்போலோ, ஆயிரக் கணக்கான ஆண்டுகளாக உலகத்தைத் தூக்கிப்பிடித்துக் கொண்டிருக்கிறான். பாரம் தாங்கமுடியாமல் அவன் தோள்களெல்லாம் துவண்டு போய்விட்டன. ஹெர்குலசைப் பயன்படுத்திக் கொண்டு, சிறிது நேரம் ஓய்வு பெறலாமா என்று நினைத்தான், அப்போலோ! அதன்படியே அப்பாவிடமுள்ள தங்க ஆப்பிள்களைத் தேடிப் பிடித்து வருவதாகச் சொல்லிவிட்டு, உலகத்தை அவன் தோளிலே தூக்கி வைத்தான். தோளுக்கு ஓய்வளித்த ஹெர்குலசுக்கு உடன் தங்க ஆப்பிள்களையும் அப்போலோ திருடிக் கொணர்ந்தான்.

ஒலிம்பஸ் மலையிலிருந்து திரும்பி வந்த அப்போலோ எப்போதும் போலத்தான் இருந்தான். ஆனால் அவன் உள்ளத்திலே ஹீரா இப்போது விஷம் தூவியிருந்தாள். ஹெர்குலசை எப்போதும் உலகத்தைச் சுமந்துகொண்டிருக்கச் செய்ய வேண்டுமென்று சூழ்ச்சி செய்தான்.

தங்க ஆப்பிள்களைத் தான் கொண்டுபோய் அரசனிடம் கொடுத்து வருவதாகவும், அதுவரைக்கும் உலகத்தைச் சுமந்து கொண்டிருக்கும்படியும் அப்போலோ அவனை மிகவும் வினயமாகக் கேட்டுக்கொண்டான். ஹெர்குலஸ் ஏற்கனவே சந்தேகப்பட்ட சமாச்சாரம்தானே இது? அவனுக்குச் சீக்கிரத்திலே சூது புலனாகிவிட்டது. இந்த நேரம் அப்போலோவிடமிருந்து தப்பிப்பதிலேதான் அவன் வாழ்நாளின் வெற்றி தோல்வி முழுதும் அடங்கியிருக்கிறது. இதை எப்படிச் செய்வான், அவன்?

அவன் யோசித்தான். உடல் வலியையே நம்பி உயிர் வாழ்ந்தவனுக்கு, மூளையை உபயோகிப்பது கொஞ்சம் கஷ்டமாகத்தான் இருந்தது. கடைசியில், மிகவும் தந்திரமாக அவனுக்காக உலகத்தைச் சுமப்பதில் தனக்கு சிரமமொன்றுமில்லையென்றும், ஆனால் தோள்பட்டை சிறிது வலிப்பதாகவும், கொஞ்சம் அவன் தூக்கிக் கொண்டிருந்தால் தோளுக்கு ஒரு 'பிரிமனை' வைத்துக் கொண்ட பிறகு, திரும்பவும் உலகத்தைப் பெற்றுக் கொள்வதாகவும் ஹெர்குலஸ் வழக்கத்துக்கு மாறாக கொஞ்சம் தந்திரமாகவே சொன்னான். முட்டாள் அப்போலோ அவன் வார்த்தைகளை நம்பி உலகத்தைச் சுமந்தான். ஹெர்குலஸ் பின் அங்கேன் நிற்கப் போகிறான்?

தங்க ஆப்பிளைக் கொண்டு வந்த பிறகும் அவனுக்குத் தர வேண்டிய தண்டனை நிற்கவில்லை. பிறகு, நரகலோகத்தைக் காவல் புரியும் மூன்று தலையுடைய செர்பரஸ் நாயை உயிருடன் கொணரும்படி உத்தரவிட்டான். அதைக்கேட்டும் ஹெர்குலஸ் கலங்கவில்லை. நரகலோக நாயுடன் அரண்மனை திரும்பினான். நாயின் குரைப்பு கேட்டு அரண்மனையே ஆட்டம் கொடுத்தது. "நாய் வேண்டாம்; அதைத் திருப்பி நரகத்துக்கே அனுப்பிவிடு"— என்று உத்தரவு போட்டுவிட்டு அரசன் ஓடி ஒளிந்து கொண்டான்.

—இப்படிப் பல வீர தீரப் பிரதாபங்களுக்கு ஹெர்குலசை உரிமையாக்குகிறார்கள், கிரேக்க புராணம் பாடியவர்கள்! இன்னும் ஆச்சரியமான சாதனையொன்றைக் கூட கூறுகிறார்கள். ஹெர்குலசின் உயிர்த்தோழனை அட்மிட்டஸ் என்பவன் தன் அருமை மனைவியை இழந்து வருந்திப் புலம்பிக் கொண்டிருந்தான். நண்பன் நாயகியை சாவுக்கு இரையாக்கி சஞ்சலப் படுவதை ஹெர்குலசால் பார்த்துக் கொண்டிருக்க முடியவில்லை. உடன் அவன் தேவலோகம் சென்று சாவுத் தேவனோடு போராடி அவன் மனைவியைத் திரும்பவும் பூலோகத்துக்கு மீட்டு வந்தானாம்.

ஹெர்குலசை இப்படியே வலிமை மிக்கவனாக—எதிரிகளைப் புழுதியாகப் பறக்கத் துடிக்கும் புயற் காற்றாக ஆக்கி விட்டால் அவனுக்கு முடிவுதான் எப்போது? சாவையே வெற்றி கண்ட வீரனை எப்படித்தான் சாகடிப்பது?

—இந்தக் கேள்விகளுக்கெல்லாம் கிரேக்க நாட்டுக் கவிராயர்கள் கற்பனை நயத்தோடு பதில் அளித்திருக்கிறார்கள்.

ஹெர்குலசின் இரண்டாவது மனைவி டெயானிரா தன் கணவன் மீது அலாதிப் பிரியம் கொண்டவள். சென்தார் நேஸ்ஸஸ் என்னும் தேவதை சாகும்போது, அவளிடம் தன் இரத்தம் நிரம்பிய பேழையொன்றைக் கொடுத்து, அவள் கணவன் எப்போதாவது வேறொரு பெண்மணியை மோகித்தால், அந்த இரத்தத்துளிகளைப் பயன்படுத்துமாறு சொல்லி செத்துப் போனாள். இந்த இடை நேரத்திலேதான் ஹெர்குலஸ் ஒரு சிறு படையுடன் எருட்டஸ் அரசனுடன் போர் நடத்திக் கொண்டிருந்தான். அவனுக்கு அயோல் என்ற அழகிய பெண்ணொருத்தியுண்டு. தன் நண்பனொருவனை கொலை செய்தமைக்காக பழி வாங்குவதற்குத்தான் ஹெர்குலஸ் போர் நடத்திக் கொண்டிருக்கிறான். ஆனால் அவனுக்குத் துன்பம் தருவதையே பேரின்பமாக நினைத்துக் கொண்டிருக்கும் ஹிராவோ அயோல் அரசகுமாரியை மணப்பதற்குத்தான் ஹெர்குலஸ் போர் செய்கிறான்— என்கிற வதந்தியொன்றைக் கிளப்பி, அதை அவன் ஆருயிர் மனைவி டெயானிராவின் காதுகளில் விழும்படியும் மிகத் தந்திரமாக ஏற்பாடு செய்தாள்.

தன் கணவன் மாற்றாள் ஒருத்திக்கு உரிமையாகப்போவது தெரிந்ததும் டெயானிரா புழுப் போலத் துடித்தாள். புருவத்தை நெறித்தாள். உடன் தேவதை தந்த இரத்தப் பேழை அவள் நினைவுக்கு வந்தது. வெள்ளைநிற ஆடையொன்றைத் தயார்செய்து, அதை நேஸ்ஸஸ் தந்த இரத்தத்திலே துவைத்து, தோழியொருத்தி மூலம் ஹெர்குலசுக்கு அனுப்பி வைத்தாள்.

ஹெர்குலஸ் இரத்தப் தோய்ந்த ஆடையைப் பார்த்தான். தன் ஆருயிராளை யாரோ கொன்றுதான் அவள் இரத்தத்திலே ஆடையைத் தோய்த்து இப்படி அனுப்பியிருக்கிறார்களென்று நினைத்தான். ஆத்திரம் அவனை வசப்படுத்தியது. அறிவிழந்தான் ஹெர்குலஸ். வந்த காரியம் யாதென்றுகூட உபசாரத்திற்காகக் கேட்காமல், தூது வந்த தோழிப் பெண்ணைக் கடலிலே தூக்கியெறிந்து விட்டான்.

தன் தோழிக்கு நேர்ந்த கதியறிந்த டெய்நிரா, தன் கணவன் அயோலை மணப்பதற்குத்தான் அவ்வாறு செய்கிறானென்று நினைத்து தற்கொலை செய்து கொண்டாள். மனைவியின் மரணம் கேட்ட ஹெர்குலஸ் சிலையானான்.

'முதல் மனைவிதான் மூர்க்கத்தனத்துக்குப் பலியாகிவிட்டாள். இரண்டாவது மனைவியும் என்னுடைய முட்டாள் தனத்துக்குப் பலியாவதா?' — அடுக்கடுக்கான வினாக்குறிகள் வேலாகமாறி அவன் இருதயத்தைத் துளைத்தன.

மனைவியை மரணத்தேவனிடம் துரத்தியடித்தவனுக்கு பாவ மன்னிப்பு ஏது?—அவன் சென்றவிடமெல்லாம் இந்தச் சந்தேகம் விசுவரூபம் எடுத்து அவனை வாட்டியது!

ஏன்கிடையாது? அவனே மரணத்தேவனிடம் சரணாகதியடைந்து விட்டால்...?

எப்படி முடியும்? வேலும், வாளும் அவன் உடலில் பட்ட மாத்திரத்திலேயே கூர்மழுங்கிப் போகின்றன! என்ன செய்வான், அவன்?

முதல் மனைவியைக் கொலை செய்தமைக்கு தானே தண்டனை ஏற்றுக் கொண்டவன், இப்போது அதே முறையைக் கையாண்டு— அதைவிடக் கடுமையான தண்டனையாக ஏற்றுக் கொள்ளத் தீர்மானித்தான்.

தன் நண்பர்களிடம் சொல்லி மலை உயரத்திற்கு தீ வளர்க்கச் சொன்னான். அந்த நெருப்பாற்றிலே சிரித்துக் கொண்டே ஹெர்குலஸ் மரணத்தேவனை முத்தமிட்டான்!

அவன் முடிவு கேட்டு ஹிரா புளகாங்கிதமடைந்தாள். கிரேக்க புராணம் பின்னிய புலவர் மணிகளுக்குக்கூட சிரிப்புதான்! காரணம், ஹெர்குலசைச் சாகடிப்பதற்குசரியான காரணமொன்றைக் கூட கண்டுபிடித்து விட்டார்களல்லவா? புராணம் படிக்கும் நமக்கும் சிரிப்புதான்—தனக்குத் தானே தண்டனை வழங்கி நேர்மைப் படுத்திக் கொள்ளும் அவன் பாத்திர அமைப்பு ஒரு புதுமையல்லவா?

உடல்வலியிலே நரகாசூரனை ஒத்த ஹெர்குலஸ் அழிந்துவிட்டான்—அதற்காக கிரேக்க நாட்டிலே தீபாவளி கொண்டாடப்படுவதில்லை! பால்ய காலத்திலே பாம்புகளை அழித்த அவனுருவம் 'உட்வர்ட்ஸ் கிரைப் வாட்டரின்' டிரேட் மார்க்காகவும், வாலிப உருவம் சைக்கிளின் டிரேட் மார்க்காகவும்தான் இன்று மாறியிருக்கிறது!

காலம் மாறிவிட்டதை அவர்கள் உணர்கிறார்கள். உலுத்துப் போன நம் சமுதாயம் அதை உணர்வது எப்போது? ஃ

—(மா.)


**இலங்கையில்**

**'தம்பி'**

கிடைக்குமிடம் :

வி. எஸ். முருகன்,
82-3, குமார வீதி,
கொழும்பு



**'முரசொலி'**

சந்தா விபரம்

**உள்நாடு-இலங்கை**

ஆண்டு சந்தா 6-0-0
6-மாத சந்தா 3-8-0

**வெளிநாடு**

ஆண்டு சந்தா 7-0-0
ஆறுமாத சந்தா 4-0-0

மூன்று மாத சந்தா கிடையாது.

# பிறை வானம்

...பிள்ளைகள் பகுதி...



## உயிருக்கு நேர்!

### சிங்கத் தம்பிகளே! தங்கத் தங்கைகளே!

"இந்தியைப் படிக்கக் கற்றுக்கொள்; பத்து வருஷம் கழித்து நீ சர்க்கார் வேலைக்குப் போக வேண்டுமென்றால், இந்தி இல்லாமல் நடக்காது; அப்படிச் சட்டம் வந்துவிட்டது-என்று என் தந்தை வெடிகுண்டு ஒன்றைத் தூக்கிப் போடுகிறார், அண்ணா! தமிழையே சரியாகப் படிக்க நேரமில்லாதபோது அதை வேறு எப்படி எங்களால் சுமக்க முடியும்?" என்று கேட்டிருக்கிறான் ஒரு தம்பி.

இந்தியை மட்டுமல்ல; இன்னும் பல மொழிகளைக் கற்கலாம்; நேரமிருந்தால்; பலனிருந்தால்; கற்பதில் அர்த்தமிருந்தால்! ஆனால், இந்த இந்தி விஷயம்...?இப்போது பெரிய பிரச்னையைக் கிளப்பிவிட்ட அந்த விஷயம் பற்றி ஒரு அண்ணனும் தங்கையும் பேசிக்கொள்கிறார்கள்; கேளுங்கள்:

✶

கற்பகம் படுசுட்டி; இருந்தாலும் புத்திசாலி; ரொம்ப ரொம்ப நல்ல பெண். "நிறைய எழுத வேண்டும்; நிறைய படிக்க வேண்டும்; — இதுதான் அதனுடைய எண்ணம்; செயல் எல்லாம்! உண்ணும் நேரம்; உலாவும் சமயம்—எப்போதும் அதன் கையில் ஒரு புத்தகம் அமர்ந்து கொண்டேயிருக்கும். இன்னொன்று, அதற்குத் தமிழ் என்றால் உயிர். தமிழைப் பற்றி பேச்செடுத்தால்போதும் — அம்மா அழைத்தால் என்ன; அப்பா அன்புக் கட்டளை இட்டால்தான் என்ன; ஊஹூம்! அசையவே அசையாது!

அந்தத் தங்கைக்கு ஒருஅண்ணா; தங்கமான அண்ணா. சுந்தரன் என்று பெயர். பள்ளி ஆசிரியர் அவர்..பள்ளியிலே தொல்லைதரும் 'குறும்புப் பட்டாள'த்துக்குப் பதில் சொல்லிவிட்டு வந்துவிடுவார் சுலபமாக. ஆனால், தன் ஒரே தங்கையின் கேள்விகளுக்குப் பதில் சொல்லவோ அவர் தடுமாறி விடுவார்; தத்தளித்து விடுவார்!

ஒரு நாள் மாலை. அண்ணாவிடம் வந்தது தங்கை. "அண்ணா! உனக்குத் தெரியுமா சேதி? நான் இந்தி படிப்பதை நிறுத்தி விட்டேனே. இந்தி ஆசிரியருக்கு 'நிரந்தர வணக்கம்' சொல்லி வீட்டுக்கு அனுப்பிவிட்டேன்" என்றது சிரித்துக் கொண்டே. அதன் கையில் 'குறள்' இருந்தது.

"ஏனம்... படித்தால் என்னவாம்?"— அண்ணா இப்படிக் கேட்டு வைத்தார்.

"என்ன கேள்வி அண்ணா இது? எதற்காகப் படிக்க வேண்டுமாம்? காலம் தங்கத்திற்கு சமம் என்பார்களே; அந்தப் பொன்னான நேரத்தை ஏன் கெடுத்துக் கொள்ள வேண்டும்?..."

"அது சரி; இந்தி படிப்பதை கெடுதல் என்று யார் சொன்னது? அடுத்த வீட்டுப் பாப்பா அழகானவள்; அவளிடம் பேசுவதோ பழகுவதோ தப்பா?......"

"நிறுத்தண்ணா! உன் உபமானமே தப்பு! கேள்... அழகான அடுத்த வீட்டுப் பெண்ணல்ல இந்தி. அவள் சுயரூபம் உனக்குத் தெரியாதா, என்ன? சட்டம் தந்த பட்டாடைகள் உண்டுஅவளுக்கு: அரசாங்கத்து ஆதரவு என்ற வைர நகைகள் ஏராளம் அணிந்திருப்பாள்... அதைக்கண்டு அவளை எடை போட்டு விடக்கூடாது, தெரியுமா?

"ஏன் நிறுத்திவிட்டாய்? இன்னும் சொல்லேன்..."

"சொல்லுகிறேன்......அந்தப் பாப்பாவின் சிரிப்பை நம்பி அவளுடன் பேசலாம்; பழகலாம்; தப்பல்ல! அவளும் பழகத்தான் செய்வாள். ஆனால் அவள் மனதிலே இருக்கிறதே, தப்பு! என்ன எண்ணத்துடன் அவள் பழகுவாள் தெரியுமா? நாளடைவில் நம் அன்னை மொழி தமிழை வீட்டை விட்டே தூரத்திவிட வேண்டும்— இப்படித்தான் அவள் எண்ணிக் கொண்டிருப்பாள். அவளை வளர்த்து வருபவர்கள் இருக்கிறார்களே, வடநாட்டுக்காரர்கள், அவர்களுடைய எண்ணமும் அதுதான். இப்படியெல்லாம் நான் நிறையபடித்தேன். ஆனால்,ஐயோ அண்ணாவே, உனக்குத் தெரியவில்லையே..."—கற்பகம் பெருமூச்சு விட்டது.

"சபாஷ் கற்பகம்! அற்புதமாகப் பேசிவிட்டாயே! இதெல்லாம் எனக்குத் தெரியாததல்ல; உனக்குத் தெரியுமா என்றுதான் கவனித்தேன். நல்லது. இன்னும் இந்தியில் என்னென்ன குறைகள் இருக்கிறது தெரியுமா, உனக்கு?"

"சொல் அண்ணா!..."

"நீ கையில் வைத்திருக்கிறாயே"

"ஆமாம்... குறள்..."

"அதைப்போல பழம் பாடல்கள் எதுவுமே இந்தியில் இல்லை; இலக்கியம் என்று சொல்லிக் கொள்ள எதுவுமே கிடையாது. போயேன்!

"இப்படிப்பட்ட மொழியை நம்மிடம் திணிக்க முயலுகிறார்களே, எவ்வளவு ஆபத்தான செயல்! அதையும் 'வருக; வருக' என்று வரவேற்கிறார்களே சிலர், அது ஏன்?"

'ஏன்? இதென்ன கேள்வி தங்கையே! அரசாங்கத்தின் தயவு எப்போதும் தேவை என்று விரும்புபவர்கள் வரவேற்கத்தானே வேண்டும்? பதவி ஆசை என்று ஒன்று இருக்கிறதல்லவா, கண்ணை மறைக்க; கருத்தை மடக்க?... ஆனாலும் அத்தகையோர் சிலர்— 'இந்தியே; நீ முந்திவா!' என்று முன்பு கதறியவர்கள் எல்லாம்— இப்போது மாறியே விட்டார்கள்!"

"அப்படியா?...ஆச்சரியம்!..."

"ஆச்சரியமென்ன? என்ன இருந்தாலும் மொழிப்பற்று தலைகாட்டத்தானேசெய்யும்? எத்தனை நாளைக்குத்தான் அது அடங்கிக் கிடக்கும்? ஒரு கதை கேள், தங்கையே! ஸ்பெயின் சென்றிருந்தான் ஒரு ஆங்கிலச்சீமான். அங்கிருந்து ஒரு கிளியொன்றை வாங்கி வந்தான். கூண்டிலடைத்தான். வளர்த்தான். பாலும் பழமும் குறைவின்றி கொடுத்தான். ஆனால் அவன் எதிர்பார்த்தபடி அந்தக் கிளி மகிழவில்லை; 'கீக்...கீ' என்று கத்தவில்லை; சொன்னதைத் திருப்பிச் சொல்லவில்லை! சீமான் ஏதும் புரியாது விழித்தான். அவனுக்கு எப்படித் தெரியும், அந்தக் கிளி 'நான் இருக்கும் இடமெது இங்கே புரியாத மொழியல்லவா பேசுகிறார்கள்? எங்கும் கேட்கவில்லையே என் ஸ்பானிய மொழி?'—என்று ஏங்கிக் கிடக்கிறதுஎன்பது?நாட்கள்சென்றன.'

"அப்புறம்...?"

"ஒரு நாள் சோகமே உருவாக உட்கார்ந்திருந்தது அந்தக் கிளி. அப்போது வீட்டு வாசலிலிருந்து எழும்பியது ஒரு ஸ்பானியனின் குரல்! அந்தக் குரலை—ஸ்பானிய மொழியைக் கேட்டதுதான் தாமதம்; கிளி துடித்து எழுந்தது; 'கீக்கீ' என்று கத்தியது; இறகுகளை பட பட வென்று அடித்துக் கொண்டது; ஆனால்...மறுகணம்.. அப்பப்பா! என்ன சொல்வது? கீழே சுருண்டு விழுந்தது; செத்து மடிந்தது. தாய் நாட்டு மொழியைக் கேட்கக் காத்திருந்து— அந்தக் களிப்பிலேயே மாண்டு போன கிளியின் கதை எப்படி? சாதாரணக் கிளியின் மொழிப் பற்றே இப்படியென்றால்,கற்றறிந்தவர்களின் நிலையைச் சொல்ல வேண்டுமா? ஆகவேதான் தங்கையே, எதிர்ப்பு! எங்கு பார்த்தாலும் ஏகோபித்த எதிர்ப்பு!"

"புரிந்ததண்ணா! பாவம், அந்தக் கிளிக்கு இருந்த மொழிப் பற்று கூடவா நமக்கில்லை?......'தமிழ் எங்கள் உயிருக்கு நேர்!' என்று சொன்னார்களே, அந்த உயிருக்கே இழுக்குவர யார்தான் சகிப்பார்கள்? தமிழ் வளர எண்ணுபவர்கள் அந்த எதிர்ப்பையும் வளர்க்கத்தான் செய்வர்!...வளரட்டும்!"

"சரி தங்கையே! இன்று எத்தனை குறள் படித்தாய்...?"

"இதோ, இனிமேல்தான் படிக்கப் போகிறேன்" என்று சொல்லிக்கொண்டே கற்பகம் ஓடியது. அதன் ஓட்டத்தை—தமிழின்பால் அதன் நாட்டத்தை எண்ணிச் சிரித்தார் அண்ணன்!

—சொர்ணம்

## தீ நட்பு வேண்டாம்; திருந்திவிடு நண்பா!

[ செல்வம் ]

என்றும் என் நண்பா!

'நிழல் நண்பனை' உனக்கு அறிமுகப்படுத்தி வைத்தேன், சென்ற வாரம். ஆனால், ஏமாற்றமே அடைந்தேன். அப்போதாவது நட்பின் பலத்தை நீ உணருவாய் என்று எண்ணியிருந்தேன். பலனில்லை; உன்னிடமிருந்து பதிலுமில்லை; என் நெஞ்சிலும் அமைதியில்லை!

நண்பனே, நீ என்னை மறந்திருக்கலாம்; ஆனாலும் நான் உன்னைப் பற்றி—உன் நலம் நடவடிக்கைகளைப் பற்றி விசாரிக்காமல் இல்லை. உன் அண்ணாவை சந்தித்தேன்; பேசினேன்; நண்பனின் நிலைபற்றி சரமாரியாகக் கேட்டேன்! அவர் கூறிய தகவல்கள் ஒவ்வொன்றும்-அப்பப்பா! என்ன சொல்வது நண்பா! வெற்றியின் நிழலாயிற்றே என்நண்பன்; அவனா இப்படி வீணர்களிடம் நட்பு கொண்டான்?—என்று எண்ணி உருகினேன். என் உள்ளம் வெடித்து விடுவது போன்ற உணர்ச்சி கண்டேன். நான் உதிர்த்த கண்ணீர்த் துளிகள்தான் இக்கடிதத்தை எழுதும் படித் தூண்டின!

நண்பா, உன்னைப்பற்றி நான் கட்டிய மனக்கோட்டைகளை அடியோடு தகர்த்து விட்டாய்; தரை மட்டமாக்கி விட்டாய்! சிந்தித்துப்பார்; நீ நடந்து செல்லும் 'அந்தப் பாதை' ஆபத்தானது நண்பனே! நல்லவர் போல் நடிப்பர்; பின் நாசமாக்கி விடுவர் அந்த சிறுமதி கொண்டோர். தீயைக் கொடியது என்பார்கள்; ஆனால் அதைவிடக் கொடியதாம், அந்த சாகசக்காரர்களின் பாச வார்த்தைகள்! அணைக்கவே முடியாது நண்பா, அந்தப் பொல்லாத தீயை! உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுவர்; நீ புன்முறுவல் பூப்பாய்! உன்னை வானளாவப் புகழ்வர்; நீ பூரிப்பு கொள்வாய்! ஆனால், அந்தப் புகழ்ச்சிச் சொற்கள் ஒவ்வொன்றும் நஞ்சு முலாம் பூசப்பட்டவை என்பதை இப்போது நீ அறியாய்; பின்னால் உணர்வாய். நண்பா,

"தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப்படும்"

என்ற வள்ளுவர் கோமானின் பொன்னான வாக்கை மறந்து விட்டாயா? நீயும் நானும் ஒன்றாகத்தானே படித்தோம். இனியாவது யோசித்துப் பார்!

என் நட்பு உனக்குத் தேவையில்லையானால் என்னை மறந்துவிடு— பரவாயில்லை. ஆனால், மாசற்ற மாணிக்கங்கள் எத்தனையோ பேர் உளர். அவர்களை உன் உயிர் நண்பர்களாக்கிக் கொள். செய்வாயா?

நான் உன்னிடமிருந்து பதிலை எதிர்பார்க்கவில்லை நண்பனே! ஆனால் "திருந்தினேன் நண்பா" என்ற இரட்டைச் சொற்களையாவது எழுது; எனக்கு தித்திப்பான செய்தியாக இருக்குமது!

மறவா அன்பு பூண்ட
உன் நண்பன்

## கொள்கை வளருது கோபுரம் போலே!

**போளூர்**
[மே தினக் கூட்டம்]
20—5—55
மாலை 6 மணி

பேசுவோர் :
சி. பி. சிற்றரசு
முல்லை-சத்தி
நெடுஞ்சோழன்
கருத்தோவியன்

**சென்னை (அமைந்தகரை)**
(அறிவு இயக்க மன்ற சார்பில்– அமைந்தகரை இலக்குமி தியேட்டர் எதிரில்)
20—5—55
மாலை 6 மணி

பேசுவோர்:
இரா. நெடுஞ்செழியன்
முகவை. பாண்டியன்

**கவுந்தப்பாடி**
(பெரியார் மைதானம்)
20—5—55
மாலை 6-30 மணி

பேசுவோர் :
ஈ. வெ. கி. சம்பத்
எஸ். அப்பாவு
எஸ். எம். சுப்ரமணியம்

**பழனி**
(மே தின விழா)
20—5—55
மாலை 7 மணி

பேசுவோர் :
அருண்மொழி
என். முத்து

**சென்னை (சூளை)**
(தி. மு. க. கிளை 5-ம் ஆண்டுவிழா)
21—5—55
மாலை 6 மணி

பேசுவோர் :
சி. பி. சிற்றரசு
சத்தியவாணிமுத்து
இளம்பரிதி
இரா. தென்னவன்

### மாவட்ட தி. மு. க. செயற்குழு கூட்டங்கள்.

**திருச்சி மாவட்டம்**

22—5—55 ஞாயிறு காலை 10 மணிக்கு திருச்சி சிந்தாமணி கழக அலுவலகத்தில் நடைபெறும்.

**கோவை மாவட்டம்**

22—5—55 ஞாயிறு மாலை 4 மணிக்கு பொள்ளாச்சி ராஜா தியேட்டரில் நடைபெறும்.

**வரவேற்பு**

22-5-55 மாலை 6-30 மணிக்கு சேலம் வி. மார்க்கெட் மைதானத்தில் தோழர் ஜி. பி. சோமசுந்தரம் அவர்கள் தலைமையில், பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கு வரவேற்பு அளிக்கப்படும்.

## வான்கோழி...

★ 4-ம் பக்கத் தொடர்ச்சி

*கொத்தலவாலையிடம் மன்னிப்புக் கேட்பதைவிட ஆச்சாரியார் தமிழ மொழியிடம் மன்னிப்புக் கேட்பது சாலச் சிறந்த காரியமாகும்!—*

*" தமிழை ஆங்கிலப் படுத்தும் போது கோணல் இரு மடங்காகி விடுகிறது " என்று எழுதியிருக்கிறார், மே 15— 'கல்கி'யில்!—*

*அப்படியானால், அவர் தமிழ் பாணியிலே கோணல் (ஒரு மடங்கு) இருக்கிறது என்றும், ஆங்கிலமாகும் போதுதான் அது இரு* மடங்காகிறது *என்றும் அவரே ஒத்துக்கொள்கிறார்.*

ஆச்சாரியாரே, தமிழிலே கோணல் இல்லை; அது ஆங்கிலத்திலே இருமடங்காகப் பெருக!— கோணல், தங்களது எழுத்திலே தான் இருக்கிறது!

முற்றம் கோணல் இல்லை; ஆச்சாரியாரே— ஆட்டத்திலேதான் கோணல்! மயிலாட்டம் ஒயிலாக இருக்கிறது; வான்கோழி நடனம் வருத்தம் தெரிவித்து 'வாபஸ்' பெற வேண்டிய அளவுக்கு இருக்கிறது! வருத்தம் தெரிவிக்கும் கட்டங்கள் வரிசையாக வரலாம், வயதான காலத்தில்! அதைத் தடுக்க ஒரே வழி, வான்கோழி நடனத்தை நிறுத்திக் கொள்வது தான்! ஃ

## செத்தும்......

★ 2-ம் பக்கத் தொடர்ச்சி

" கலங்காதே, தாமரை! இத்தனை நாட்களும் நீ என் நிழலாக வாழ்ந்தாய். என் உடலின் உயிராக இருந்தாய்... நான் பெருமூச்சு விட்டால் உன் முகத்திலே பிரேதக்களை சொட்டும். என் கண்ணிலே நீர் வடிந்தால் உன் நெஞ்சிலே உதிரம் கொட்டும்! கவலையால் நான் புருவம் நெறித்தால் நீ புழுப் போலத் துடிப்பாய். எனக்குத் தலைவலி என்றால் உனக்கு உடம்பெல்லாம் வலியெடுக்கும். என்றும் இணை பிரியாத என் இன்ப நிழலே! தன்னலம் மறந்து என் நலத்திற்காக வாழ்ந்த என் தாமரையே! உன்னை நடுக்காட்டில் விட்டு நான் ஓடிவிட மாட்டேன்! இதோ இந்தப் பேழையை ஏற்றுக்கொள். அதிலே எழுதியிருப்பது போல் நடந்துகொள். நீ சாகும்வரை அது சோறு போடும். இதுவரை நீ என் புகழ் பாடி வாழ்ந்தாய்—இனி மேல் நீ என் வசைபாடி வாழலாம்!"

"என்ன சொல்கிறாய் தங்கையா! ஜன்னியில் பிதற்றுகிறாயா?"

"ஜன்னி எனக்கல்ல தாமரை! இந்த சமுதாயத்துக்கு! அந்த ஜன்னியை பயன்படுத்திக் கொண்டே, இந்தப் பேழையிலிருக்கும் மருந்துகளையும் விற்றுவிடு"—அதற்குமேல் தங்கையா பேசவில்லை. 'கூ' வென்ற இரைச்சல் போட்டு, கப்பல் நகர்ந்தது. அவன் கைகள் அசைவது மறையும் வரையில் அங்கிருந்துவிட்டு, துறைமுகத்தை விட்டு நகர்ந்தான் தாமரை! அவன் மனம் ஒரு நிலையில் இல்லை.

"ஜன்னி எனக்கல்ல தாமரை! இந்த சமுதாயத்துக்கு! அந்த ஜன்னியை பயன்படுத்திக் கொண்டே இந்தப் பேழையிலிருக்கும் மருந்துகளையும் விற்றுவிடு"

"இதுவரை நீ என் புகழ்பாடி வாழ்ந்தாய்!—இனி மேல் நீ என் வசை பாடி வாழலாம்!"

—தங்கையாவின் இந்த வார்த்தைகளுக்கு அவனால் அர்த்தம் கண்டுபிடிக்க முடியவில்லை. வீட்டிற்குச் சென்றதும் தாமரை, தங்கையா கொடுத்துச் சென்ற பேழையைத் திறந்தான். அதிலே அவன் சொந்த டயரியும், பல புகைப்படங்களும் இருந்தன.

அவன் முகத்திலே மகிழ்ச்சியின் சாயல் படர்ந்தது! 'தங்கையா தந்த இந்தப் பேழையிலே—அதனுள்ளிருக்கும் இந்த டயரியிலே இருக்கிறது என் பிழைக்கும் வழி' என்று கூக்குரல் போட்டான்.

அதன் பிறகு?

தங்கையாவின் மறைவிற்குப் பிறகு தாமரை தரித்திரனாகிவிடவில்லை. அவன் தெருத்தெருவாகப் பிச்சையெடுப்பான் என்று எதிர்பார்த்த அவன் எதிரிகள்கூட அவன் போக்கு கண்டு திகைத்தனர்.

என்ன நடந்தது, அப்படி?

தாமரை இப்போது 'தாமரை' என்ற பத்திரிகையின் ஆசிரியன். தணல் கொட்டும் நடையிலே, நாட்டு மக்கள் வணங்கும் நடமாடும் தெய்வமாம் தங்கையாவின் சொந்த வாழ்க்கையை நடுத்தெருவுக்கு அழைத்து வந்தான்.

"ஏப்ரல் 10-ந்தேதி இரவு பத்து மணிக்கு தங்கையா செய்தது என்ன?

அவன் டயரியே பேசுவதைப் படியுங்கள்!

தாமரை—விலை இரண்டணா"— இப்படி சுவரொட்டிகள் நாடெங்கும் தொங்கின!

'தாமரை' பத்திரிகை விற்பனை புயல் வேகத்தில் பெருகியது!

"தங்கமானவனாயிற்றே, தங்கையா! இப்படிக் காமக் கூத்தாடுவானென்று எதிர்பார்க்கவில்லையே!" என்று 'த்சு' 'த்சு' கொட்டுவோர் தொகையும் பெருகியது!

'தாமரை'ப் பத்திரிகையைக் கையில் வைத்துக் கொண்டே, "நான் அப்போதே நினைத்தேன். அனுபவமில்லாமல் அந்தக் கற்பழிக்கும் காட்சியில் அவ்வளவு தத்ரூபமாக நடிக்க முடியுமா?" என்று ஆதாரம் காட்டினர் சிலர்.

'தாமரை' உண்மை விளம்பி என்ற பெயர் பெற்றது. பின்னர் என்ன? போட்டோவும் டைரியும் பேசினால் அந்தப் பெயர் கூடவா கிடைக்காது?

தாமரையை முகமூடி கிழிக்கும் வீரனென்றனர்; தீரனென்றனர்; ஆனால் அவன் உள்ளம் மட்டும், " இதுவரை என் புகழ்பாடி வாழ்ந்தாய்; இனிமேல் நீ என் வசைபாடி வாழலாம்"—என்ற அந்த வார்த்தைகளையே உச்சரித்துக் கொண்டிருந்தது.

தங்கையா அமெரிக்காவிலே அனாதையாகச் செத்து விட்டாலும். இருந்தால் என்ன; செத்தும் அவன் தாமரைக்கு கொடுத்த கொடை இன்னும் சாகவில்லையே !

★



**செயல் வீரர்களே !**
**மாநில மாநாட்டு நிதி சேர்க்கத் தொடங்கிவிட்டீர்களா?**

# சமயம் பார்த்திருக்கும் ‘சமஸ்கிருத சியாங்கு’கள்!

அன்புள்ள குமார்,

சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் என்னுடைய கார்டு கிடைத்ததாக எழுதியிருக்கிருய்; மிக்க மகிழ்ச்சி.

இந்தியைப் பற்றி இப்போது கிளம்பியுள்ள வதந்திகள் உன்னுடைய உள்ளத்தைக் குழப்புவதாக — எழுதியிருக்கிருய். உண்மைதான்! இந்தி பற்றிய மத்திய சர்க்கார் அறிக்கை உன்னை மட்டுமல்ல—‘கவர்ண்மெண்ட்’வேலைகளுக்காகக் கால் கடுக்க ‘கியூ’விலே நிற்கும் ஆயிரமாயிரம் வாலிபர்களை — அவர்களை உத்தியோக நாற்காலியில் உட்காரவைத்து முப்பதாந் தேதி முடிவுக்கு வந்ததும் கரன்சி நோட்டுகளை கணக்குப் பார்க்கத் துடிதுடித்துக் கொண்டிருக்கும் எண்ணற்ற பெரியவர்களை—பெற்றோர்களை அந்த அறிக்கை பாதித்திருக்கிறது. இது நாள்வரை இரவு பகலென்றும் பாராது பாராயணம் செய்துகூட இந்தி மொழியின் அரிச்சுவடியை மட்டுமே புரிந்துகொள்ள முடிந்த அக்ரகார வாசிகளைக்கூட அது பெருமளவுக்குப் பாதித்திருக்கிறது, குமார்!

ஐ. ஏ. ஸ். போன்ற உத்யோகத் தேர்வுகளுக்கு இந்தி மொழியா?—போர்க் காலத்தில் நாஜிகளுக்கு வெற்றி குவிவதைக் கண்டு, ஜெர்மன் மொழியின் பால பாடத்தைக் கற்கத் தொடங்கிய மைலாப்பூர் — மாம்பலவாசிகள்கூட இப்போது இரத்தச் சிகப்பேறிய விழிகளோடு கண்ணீர் வடிக்கிருர்கள்.

முன்பு கட்டாய இந்திப் பெண்ணுக்குக் கட்டியங் கூறி, அவளுடைய குழி விழுந்த கண்களுக்கு சட்டமென்னும் மை தடவி, அவளை நம்மோடு குலவ விட்ட ஆச்சாரியார், இப்போது “விபச்சாரியோடா வாழ்க்கை நடத்துவது?” — என்று கூறி புழுதி வாரி இறைக்கிருர்.

‘மித்திரன்’ ஏடு சித்திரம் தூவும், இந்தி வேண்டாமென்று இடியேறுபோல அலறுகிறது!

இந்தியைக் கல்லென்று காட்டி அதை எப்படி நம்மால் ஜீரணிக்க முடியும்? — என்று கேள்விக்குறி எழுப்புகிருர் ‘கல்கி’யார்!

இந்தி எதிர்ப்பு சமயங்களிலே நம்மீது இழிதகை வார்த்தைகளை உதிர்த்துக் குறுநகை புரிந்த ‘விகடன்’ நிதானம் வேண்டுமென்று கூக்குரல் போடுகிருர்!

தென்னிந்தியக் கிறிஸ்தவர்கள் மாநாட்டிலே இன்றைய நிலையில் இந்தியின் அவசியமின்மைப் பற்றி தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறார்கள்!

இந்திக்கு இப்படி திக்கெட்டும் எதிர்ப்பு திரண்டிருக்கிறது. தென்னகத்திலே புயலும், புகையும் எரிமலையும் உருவாகியிருக்கின்றன.

இந்த நேரத்திலே சென்ற கிழமை சென்னைக்கு விஜயம் செய்த தேபார் கவலைப் படுவதற்கு ஒன்றுமில்லை — என்று அபயம் அளித்திருக்கிருர்!

நிலைமைகள் இப்படி சீர்கெட்டிருக்கும்போதுதான் நீ எழுதியிருக்கிருய், ‘நேரு இருக்கும் வரை நாம் நிம்மதியாக இருக்கலாம்; அவர் கண் வீச்சு ஒன்றிலேயே இந்தி வெறியர்கள் எரிந்து சாம்பலாகி விடுவார்கள்’—என்று!

அய்யோ, நண்பனே! ஆங்கில ஏடுகள் பலவற்றைப் புரட்டி, அகிலத்துச் செய்திகள் அனைத்தையும் கரைத்துக் குடிக்கும் நீயா இப்படி எழுதியிருக்கிருய்




என்று நினைக்கும்போது எனக்கு சிரிப்புத்தான் வருகிறது.

அன்புள்ள குமார்! நீ படித்திருந்தும் அரசியல் பின்னணிக்கேற்ப அன்ருடச் செய்திகளைப் பொருத்திப் பார்க்கும் நல்ல பண்பை நீ வளர்த்துக்கொள்ளவில்லை. இன்று வட நாட்டில் ‘இந்தி ஹிட்லர்’கள் மட்டுந்தான் வாழ்கிறார்கள் என்ரு நினைக்கிருய்? இல்லை; இல்லை; ‘சமஸ்கிருத சியாங்கே ஷேக்’குகளும் அங்கே நிறைந்து கிடக்கிருர்கள். இந்த சியாங்குகள் இந்தியை இடுகாட்டுக்கு அனுப்பிவிட்டு, சமயம் பார்த்து செத்துப்போன சமஸ்கிருதத்துக்கு பட்டம் கட்டிவிட வேண்டுமென்று கனவு காண்கிருர்கள்.

அத்தகைய கூட்டத்தாரின் சர்வாதிகாரிதான் உள்நாட்டு மந்திரி டாக்டர் கட்ஜூ. ஏப்ரல் 16-ந் தேதியன்று டில்லிக்குப் பக்கத்தில் கூடிய சந்தான தர்ம மாநாட்டின்போது அவர் பேசிய பேச்சை அப்படியே கீழே தருகிறேன்:

“நம்முடைய பண்பும் கலாச்சாரம் வார்க்கப்பட்டிருக்கும் சமஸ்கிருதமொழியானது விரைவிலே இந்தியை அகற்றிவிட்டு, அதன் ஸ்தானத்திலே அமர்ந்து விடும்.”

—இதை யார் பேசியது என்று நினைக்கிருய்? பழமைக்குப் பல்லாண்டுகூறும் தாண்டன் மகாரிஷி என்று கருதுகிருயா? இல்லையென்ருல் மதவெறி பிடித்தலையும் மூர்க்க மனப்பான்மை கொண்ட ஆர் எஸ். எஸ். பிரமுகர் கோல்வால்கர் என்று கருதுகிருயா? இருவருமே இல்லை; பொறுப்பான பதவி வகிக்கும் கட்ஜூதான் வடமொழிப் பிணத்தை வைத்து இப்படிக் கதறியிருக்கிருர். நேற்று வரையில் உள்நாட்டு அமைச்சரின் கூற்றை. நேருவோ, தேபரோ யாருமே மறுக்கவில்லை.

இப்போதாவது புரிகிறதா குமார், இந்தி வெறியர்களின் உள் நோக்கம்? இந்த நேரத்திலேதான் நீ கூப்பாடு போடுகிருய், ‘நேரு இருக்க பயமேன்’ என்று!

நேருவை 1947-ம் ஆண்டு ஆகஸ்ட் 15-ந் தேதிற்குப் பிறகு விடுதலை வீரு கொண்டு, ஏகாதிபத்யவாதிகளைக் கூறுபோட்டு வாழ்ந்த மோதிலால் மைந்தர் என்ரு நினைத்துக் கொண்டிருக்கிருய்? இப்போது அவர் பழமைக்குப் பாக்கு வைக்கும் பத்தாம்பசலி! பிடுங்கலை விரும்பிகளுக்கு வேட்டு வைக்கும் காட்டு ராஜா! இப்படி வேகமாக அவரைக் குறிப்பிடுகிறேனே என்று நீ ஆத்திரப்படுகிருயா? இதோ, அதற்கும் சரியான விளக்கம் தருகிறேன்.

சில நாட்களுக்கு முன்னர் டில்லி பாராளு மன்றத்திலே பசுவதை சம்பந்தமாக புகைச்சல் கிளம்பியது உனக்கு நினைவிருக்கலாம். ஒரு காலத்தில் காங்கிரசின் தூணாக இருந்து, நேருவுடன் முட்டிக் கொண்ட காரணத்தால் இப்போது தூர்ந்து போன கிணருக மாறிவிட்ட புருஷோத்தமதாஸ் தாண்டன்கூட நேருவுக்கு எதிர் முகாமில் உட்கார்ந்து கொண்டு கைதூக்கினர். அந்த நேரத்தில் தான் ஆத்திர வசப்பட்ட மோதிலால் மைந்தர் குறிப்பிட்டார்: “பசுவதை சம்மந்தமாக லோக்சபாவிலே நிலவிவரும் அபிப்பிராயம் பலமடைந்தால், நான் பிரதமர் பதவியை ராஜிநாமா செய்து விடுவேன” — இப்படி அவர் கர்ஜனை புரிந்து எல்லோரையும் மிரட்டிக் காட்டினர்.

உனக்கு நன்ருகத் தெரியும்; பசுவதை சம்மந்தமாக எழுந்த பிரச்சினைகள் யாவும் வகுப்புவாதக் கும்பலாம், இந்துமகா சபையினர் செய்து காட்டிய ‘அரசியல் ஸ்டண்ட்’—என்று! அதற்காக நேரு அவ்வளவு கஷ்டப்பட்டு ராஜிநாமாவின் எல்லை வரை சென்று திரும்பியிருக்க வேண்டியதில்லை.

சரி; அவர் அவசரக்காரர்; ஆத்திரத்தில் ஏதோ செய்து விட்டார் என்றே வைத்துக் கொள்வோம்.

நேருவிற்கு உண்மையிலேயே இந்தி வெறியர்கள்பால் சேகம் இருக்குமானல், அவர்கள் போக்கிலே விவேகம் சிறிதுமில்லை என்பது திட்டவட்டமாகத் தெரிந்திருக்குமேயானல் மேற்குறிப்பிட்டது போன்ற நடவடிக்கையொன்றை எடுத்துக் கொண்டு, ஏன் அவர் தன்னுடைய நாட்டு மக்களுக்குத் தெளிவாக அறிவித்திருக்கக் கூடாது?

கேவலம், வகுப்புவாத கொள்கையை விஷம்கொட்டி வளர்க்கும் ஒரு சிலரின் பயமுறுத்தலுக்காக ராஜிநாமா செய்யப் போவதாக பூச்சாண்டி செய்து அடக்கியவர், ஏன் இந்தி வெறியர்களையும் இதை போலச் செய்து, அந்த மத யானைகளின் மத்தகத்தை அடக்கியிருக்கக் கூடாது?

ஏன் அப்படிச் செய்யவில்லை? உலகம் செவிடு படும்படி தினந்தினம் எதையாவது உரத்த குரலில் பேசிக் கொண்டிருக்கும் நேரு, இப்போது மட்டும் ஏன் குமார், கட்ஜூ போன்ரோரின் முறை கெட்ட செயலைக் கண்டித்திருக்கக் கூடாது?

“பாண்டுங்கிலே மெருகேறிய பத்தரை மாற்றுத் தங்கமாயிற்றே, அவர்! அவர் மீது பாய்கிருயே!”—என்று நீ என் மீது பாயாதே. சிந்தித்துப் பார்!

அன்புள்ள,
**பொன்முடி.**

—(ம

# 'எழுத்தாணி'

இந்த வாரம் பரிசு பெறும் தோழர் ;
(●) கே. மணியம்; ஈரோடு.

பி. பி. ஹமீத்; ஈரோடு.

(?) விஷம் எதிலிருக்கிறது?

ஆச்சாரியாரின் நாக்கில்! அவசர சாமி பிடித்தெழுதும் பேனாவில்!

(?) தேடினும் கிடைக்காதது எது?

காங்கிரஸ் கட்சியில் பதவி ஆசையில்லாதவர்கள்!

மலர்மன்னன்; திருச்சி.

(?) வருகிற பொதுத் தேர்தலிலே கம்யூனிஸ்ட் கட்சியின் கதி என்ன?

ஆந்திராவிலே 'மெலெங்கோவ்' ஆன கம்யூனிஸ்ட்கட்சி,அடுத்த தேர்தலிலே 'பெரியா'வாகி விடும்!

வில்லியம்; காரமடை.

(?) பாசாங்குக்காரப் பெண்களின் அழுகையை எதற்கு ஒப்பிடலாம்?

அன்றாடம் அவர்கள் எடுக்கும் ஷவர் பாத்'துக்கு!

அ. மணி; பரதூர்.

(?) எழுத்தாணியை வாள் எதிர்த்தால்......?

எழுத்தாணி வாளுக்குத் தோற்றதாக சரித்திரமே கிடையாது!

பன்னீர் அய்யாசாமி;
இராசிபாளையம்.

(?) ஆச்சாரியாரின் அரசியல் தந்திரம் நம்நாட்டுக்குத் தேவை தானா?

ஏகாதிபத்ய நாட்டுக்குத்தான் நரிகளின் துணை தேவை. ஜனநாயக நாட்டுக்கு அது தேவையில்லை.

கார்த்திபன்; மலாயா.

(?) இந்தி பொது மொழியாவதை இன்னும் பல ஆண்டுகளுக்கு ஒத்திப் போடச் சொல்கிறீர்களா?

ஒத்திப்போடச் சொல்லவில்லை; அரசியல் பீடத்திலிருந்து எப்போதுமே ஒதுங்கியிருக்கச் சொல்கிறோம்!

(●) கே. மணியம்; ஈரோடு.

(?) நேருவின் வாரிசு எது?

காங்கிரசின் சாம்பல்!

நந்தகோபால்; தஞ்சை.

(?) லோகியோ ஏன் கைது செய்யப் பட்டார்?

அவர் கைதாகியிருக்காவிடில் பிரஜா சோஷலிஸ்ட் என்கிற கட்சி இருப்பதாகவே மக்களுக்கு நினைவு வந்திருக்காது; அதனால் தான்!

செந்தில், ஒ. சிறுவயல்.

(?) ராமநாதபுரம் ராஜா இடிந்து போன அரண்மனையை 'பூமி தானம்' கொடுத்திருக்கிறாரமே?

பின்னர் என்ன; புதிதாகக் கட்டிய மாளிகையையா தானம் வழங்குவார்? செல்லாக் காசையும், கால் கடிக்கும் செருப்பையும் சிலர் தானம் கொடுப்பதற்காகவே சேர்த்துவைப்பதுண்டு!

மு. கற்பகமணி, வாலாஜாபாத்.

(?) நினைத்தது கனவாகமலிருக்க நான் என்ன செய்ய வேண்டும்?

தூங்காமலிருக்க வேண்டும்!

நைனியப்பன்; சேலம்.

(?) 'எங்கள் பேச்சைக் கேட்டா ரஷ்ய அரசாங்கம் நடக்கிறது?'— என்று கம்யூனிஸ்ட் பிரமுகர் எங்களூரில் பேசினார்: அதைப்பற்றி என்ன கருதுகிறீர்கள்?

பொம்மலாட்டத்தில் பொம்மைகள் மனிதனை ஆட்டவேதில்லை; மனிதன்தான் பொம்மைகளை ஆட்டுவான்!

சந்திரகாந்தன்; மைசூர்.

(?) காதல் என்றால் என்ன?

வாழ்க்கை என்பது தூக்கமானால் அதில் காதல் என்பது ஒரு கனவு என்று யாரோ சொன்னதாக ஞாபகம்.

அழகிரி; மண்டபம்.

(?) கோவாவுக்கு விடுதலை எப்போது?

போர்ச்சுகீசியரின் பிடிவாதத் தன்மையைப் பார்க்கும்போது, அங்கும் ஐதராபாத்தைப் போல ஒரு போலீஸ்நடவடிக்கை தேவையாக இருக்கும் போலிருக்கிறது.

அப்துல் ஐபார்; பெங்களூர் கண்டோன்மெண்ட்.

(?) காங்கிரசில் தலை சிறந்த தலைவர்கள் எத்தனை பேர்?

குறைவுதான்; தலை நரைத்தவர்கள் நிறைய இருக்கிறார்கள்!

ப. அங்கப்பன்; காரமடை.

(?) பொதுநலப்பணி என்பது யாது? அதில் ஈடுபடுபவர்கள் எவ்விதத் தன்மைகளைப் பெற வேண்டும்?

அது ஒரு புலிவேட்டை! கொள்கை என்ற துப்பாக்கியும், குறிபார்த்துச் சுடும் சமயோஜித புத்தியும்தான் அதற்குத் தேவை! அதோடு, இடையிலே கால்களைப் பிராண்டும் அட்டைகளை அலட்சியம் செய்கிற மனப்பண்பையும் வளர்த்துக் கொண்டால் வெற்றி நிச்சயம்! நிச்சயம்!!

செந்தாமரை; கோளத்தூர்.

(?) வடநாட்டை ஏலம் போட்டால், அதை ஏலம் எடுக்க முன் வருபவர் யாராக இருக்கும்?

தென்னாட்டைக் குத்தகை பேசியிருக்கும் கோமான்கள் சொந்த நாட்டை ஏன் ஏலம் விடப் போகிறார்கள்? அவர்கள் என்ன, நம்மைப் போல ஏமாந்தவர்களா?

தெக்சணாமூர்த்தி; காரப்பிடாகை.

(?) சாவு யாருக்கு சுவை தரும்?

தற்கொலை செய்து கொள்கிற வர்களுக்கு!

13—5—55-ந் தேதி 'முரசொலி'யில் 'இடையிலே இருபத்திநாலாயிரம்' என்ற தலையங்கத்தை படித்து முடித்ததும் உடனே மாநில மாநாட்டு நிதிக் குழுவிடம் சென்று ரூபாய் ஒன்று செலுத்தி ரசிது பெற்றுக்கொண்டேன்.

— மி. குப்புசாமி,
பெரியகுளம்.

சென்ற வாரம் வெளிவந்த 'தசாவதார' கேலிச் சித்திரத்தை பார்த்துக் கொண்டே இருக்கத் தோன்றுகிறது. அரசியலில் 'ஸ்டண்ட்' வேலைசெய்யும் அநாமதேயங்களுக்கு சரியானஆப்பு! வாழ்த்துதலுக் குரியது.

— அ. ப. பாலசுப்ரமணியம்,
வாலாயர் அணை.

13—5—55 இதழ் கண்டேன். 'கூவாத குயில்' இது கதையல்ல; உள்ளத்தைத் தொடும் உணர்ச்சி சித்திரம். மலருக்கு மலர் தாவும் வண்டுகளுக்கு நல்ல தோர் சவுக்கடி.

— எஸ். கமலாவதி,
பரமக்குடி.

எழிலேடாம் 'முரசொலி' என்பாவையில் இன்னதன்மையினதென்று இயம்ப இயலவில்லை. செந்தமிழின் சிறப்பும், செந்தேனின் இனிமையும் கொண்டு சிறுமைக்குச் சீற்றமும், சிலருக்கு ஏற்றமும் தரவல்லதாய் உள்ளதென்பதை தவிர்த்து. இஃது முகமன்று — அகந்தரும் உண்மை.

— 'முத்தெழிலன்'
சென்னை-1

குறளோவியம் என் சிந்தை கவர்ந்த எழிலோவியம்! முத்தைத் தாங்கள் தொகுத்திருக்கும் முறையிலே, அருவி நீர் குதித்தெழுவதுபோல் தெள்ளு தமிழ் துள்ளி விளையாடுகிறது! சர்க்கரைப் பொங்கல் உண்டால் வாய் இனிக்கும்; இவ் வடிகளை உண்டால் என் உள்ளமெலாம் இனிக்கிறது!

— மலர் மன்னன்,
திருச்சி.

சென்ற வாரப் 'பிறைவானத்'தில் 'ஒரே நண்பன்—உயிர் நண்பன்' என்ற கடிதத்தைப் படிக்கும் போது, 'அந்த உயிர் நண்பன் யார்?' என்று அறியத் துடித்தேன்; படித்தேன்; முடிவில் நட்பின் வலுவை உணர்த்தினான் 'நிழல் நண்பன்'!

— நாகை இராசன்,
பொன்மலை.

6—5—55 இதழில் வெளிவந்த 'பாண்டுங்' என்ற கட்டுரை 'திராவிட நாட்டுப் பிரிவினை'யை எதிர்க்கும் மராமண்டைகளுக்கு விளக்கம் தரும் வகையில் அமைந்திருக்கிறது.

—ஏ. கே. நடராசன்,
திருவல்லிக்கேணி.

கிரேக்க புராணம் முடிந்தவுடன், தென்னாட்டில் செத்தும் சாகாமல் இருக்கின்ற புராணங்களின் ஆபாசங்களை வெளியிட வேண்டுகிறேன்.

—என். முத்து,
கோட்டாம்பட்டி.


## தி. மு. க. மாநில மாநாட்டு நிதிக்காக

## சிறப்புச் சொற்பொழிவு

இடம்: சென்னை, கோகலே மண்டபம்
காலம்: 24—5—55-செவ்வாய்
நேரம்: மாலை 6 மணி

## அறிஞர் அண்ணா

அவர்கள்

சொற்பொழிவாற்றுவார்கள்

நுழைவுக் கட்டணம் ரூ. 1, அணா 8.

— சென்னை மாவட்ட தி. மு. க.


Edited, Printed and Published by M. Karunanithi at Murasoli Press, 4/128, Mount Road, Madras-2